ජනමාධ්‍ය අමාත්‍යාංශය
வெகுசன ஊடக அமைச்சு
MINISTRY OF MASS MEDIA

සැලසිනෙ
செலசினெ
SELACINE
SELACINE TELEVISION INSTITUTE







# වාර්ෂික වාර්තාව
# வருடாந்த அறிக்கை
# ANNUAL REPORT
# 2017

கௌரவ வெகுசன ஊடக அமைச்சர்
வெகுசன ஊடக அமைச்சு
கொழும்பு 05.

கௌரவ அமைச்சரே,

**ஆண்டறிக்கை - 2017**

1971 38 ஆம் இலக்க நிதி சட்டத்தின் 14 (1) பிரிவுக்கமைய 2017 டிசம்பர் 31யுடன் முடிவடைந்த ஆண்டுக்கான ஆண்டறிக்கையை செலசினே தொலைக்காட்சி நிறுவனம் சார்பாக என்னால் இத்தால் சமர்ப்பிக்கின்றது.

பிரபாத் சி பெரேரா
தலைவர்
செலசினே தொலைக்காட்சி நிறுவனம்
கொழும்பு 07.

# உள்ளடக்கம்

தூரநோக்கு, பணி, நோக்கம்
05

தலைவரின் மதிப்புரை
07

நிறுவனத்தின் தகவல்கள்
08

நிர்வாக கட்டமைப்பு 2017 மற்றும் தொடர்பு கொள்ளும் விபரங்கள்
09

நிதியறிக்கை - 2017
19

நிதியறிக்கைக்கான குறிப்புகள்
22

வருமான அறிக்கை
25

ஐந்தொகை
26

காசுப்பாய்ச்சல் கூற்று
27

நிதியறிக்கைக்கான குறிப்புக்கள்
29

2017 ஆம் ஆண்டின் நிதி தொழிற்பாடுகள் தொடர்பான கணக்காய்வாளரின் கருத்துக்கள்
39

கணக்காய்வாளர் அறிக்கைக்கான பதில்கள் 2017
49

## தூரநோக்கு

அரச இயந்திரத்தின் அபிவிருத்தி மற்றும் செயற்பாட்டு மற்றும் அனைத்து வியாபாரத்துறைகளினதும் வளர்ச்சியினை படைப்பாற்றலுடன் விளம்பரப்படுத்துவதன் மூலம் விளம்பரத்துறையின் முன்னோடியாதல்.

## பணி

நிபுணத்துவத்துக்கு அப்பாற்பட்ட படைப்பாற்றல் மிக்க மனிதவள உதவியுடன் படைப்பாற்றல் மிக்க, திட்டமிட்ட மற்றும் உயர் மட்டத்திலான தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி அரச நிறுவனங்களுக்காக கட்புல, செவிபுல தொடர்பாடல் மற்றும் வேறு படைப்பாற்றல் மிக்க பிரச்சார சேவைகளை வழங்குவதன் மூலம் இலங்கையின் அபிவிருத்தி,சமூக மற்றும் அரசியல் அபிவிருத்திக்காக தொடர்ச்சியாக பங்களிப்பு வழங்குதல்.

## நோக்கம்

நிதி நிலமையினை உயர்த்துதல்

சந்தை இலாபத்தினை உயர்த்துதல்

நிறுவன காலாசாரத்தினை உயர்த்துவதற்கான உபாயங்களை செயற்படுத்தல்

நிறுவன ஊழியர்கள் மற்றும் தலைவர்களை வளர்ச்சியுறச் செய்தல்



# தலைவரின் மதிப்புரை

செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் தலைவராகப் பதவியேற்ற பின்னர் செலசினெ தொலைக் காட்சி நிறுவனத்தின் 2017 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கைக்கு இந்த செய்தியை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

35 வருட பெருமைவாய்ந்த வரலாற்றைக் கொண்ட செலசினெ நிர்வாகம், நிதி மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவுகளால் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் அடைந்ததை இந்த 2017 ஆம் ஆண்டுக்கான விற்பனைகள் பிரதிபலிக்கின்றன.

2017 ஆம் ஆண்டில் அடைந்த வருடாந்த விற்பனை வருமானம் இலங்கை ரூபா 637..3 மில்லியன் ஆகும். இது 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 239.7 மில்லியன் ரூபா அதிகரிப்பு என்பதுடன், 2017 ஆம் ஆண்டிற்கான வருமான இலக்கையும் தாண்டியுள்ளது என்பதையும் காட்டுகிறது. எங்களுடைய விற்பனை இலக்கை மேலும் அதிகரிப்பதற்கு நாங்கள் சந்தைப்படுத்தல் குழுவிற்குத் தேவையான வழிகாட்டல்களையும், ஊக்குவிப்பையும் வழங்குவோம்.

ஊழியர்களின் வினைத்திறனையும், உற்பத்தித் திறனையும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். எங்களுடைய மிகவும் பெறுமதிவாய்ந்த சொத்தான எங்களுடைய ஊழியர்களின் மேம்பாட்டிற்காக மனிதவளப் பிரிவு அயராது உழைத்து வருகிறது. செலசினெயின் மனிதவளத்தை தொடர்ந்து அபிவிருத்தி செய்வதற்காக மனிதவளப் பிரிவு, ஊழியர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்தல், அவர்களுடைய கஷ்டங்களை நீக்குவதற்கு வேண்டிய நிறுவன உதவிகளை வழங்குதல், மருத்துவ திட்டத்தை அறிமுகம் செய்தலுடன், குழுவாக இயங்கும் நடவடிக்கைகளுக்காக விளையாட்டுப் போட்டிகள், நலன்புரி சேவைகள் வழங்குதல் போன்ற நடவடிக்கைகளுக்கான பின்னணியை ஆரம்பித்துள்ளது.

தயாரிப்புப் பிரிவானது ஏராளமான வாடிக்கையாளர்களுக்குப் பல புதிய ஆக்கம் நிறைந்த படைப்புகளாக ஆவணப்படம் முதல் வர்த்தக தயாரிப்புகளைத் தயாரித்துள்ளது. V2025 ஆவது படைப்பை குறிப்பிடலாம்.

வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக் கூறுதல் என்பவற்றை உறுதிசெய்வதற்குமாக உள்ளக கணக்காய்வுப் பிரிவை மேம்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

எந்த விளம்பர முகவரினதும் வரலாற்று மையம் அதன் புது படைப்புகளை முன்வைக்கும் பிரிவேயாகும். ஆகவே கண்டிப்பான வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு ஏற்றவாறு கொடுப்பதை புது படைப்புகளை முன்வைக்கும் பிரிவு உறுதி செய்வதற்காக இப் பிரிவிற்கு கூடுதல் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த முக்கிய பிரிவை மேலும் மேம்படுத்துவதற்கு அடுத்து வரும் ஆண்டில் பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். V2025 நிகழ்வு இந்த நிறுவனத்தின் புதிய ஆக்க திறமைக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

நிகழ்ச்சிகள் முகாமைத்துவப் பிரிவானது ஐக்கிய நாடுகள் வெசாக் தினம், ஜனாதிபதி திரைப்பட விருதுகள், தகவல் அறியும் உரிமை சட்டம் ஆகிய உயர்மட்ட விவரங்களை வெற்றிகரமாக நடாத்தியுள்ளது.

லேக் ஹவுஸ் நிறுவனத்துடனுமான எங்களுடைய வலுவான தொடர்புகள் இந்த வருடத்தில் மேலும் பலப்படுத்தப்பட்டமைக்கு மேற்குறித்த நிறுவனங்கள் அதி உயர் எண்ணிக்கையிலான விளம்பரங்களை வழங்கியமை சான்று பகர்கிறது. இது வரைகலைப் பிரிவினால் பொருத்தமான விளம்பரங்களை வடிவமைத்ததனாலும், ஊடக பிரிவு அவற்றை அட்டவணைப்படுத்தி திறமையை வெளிப்படுத்தியதனாலும் ஆகும்.

விளம்பரப்படுத்தலுக்கு மொத்த பொருளாதார முறைக்குப் பொருத்தமான ஒரேயொரு அரச நிறுவனமாக எங்களுடைய பொறுப்புக்களை விரிவுபடுத்துவது தவிர்க்கமுடியாததாகும். ஆகவே இனிவரும் ஆண்டுகளில் அரசாங்கத்தின் விளம்பர தேவைகள் அனைத்திற்கும் ஒரேயொரு முகவராக செலசினே மாற்றப்படும். செலசினே அரச பொறிமுறைகளை விருத்தி செய்தல் அடங்கலாக அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை பொது மக்களுக்குத் தெரிவிப்பதன் மூலம் பிரஜைகளுக்கு வலுவூட்டும் அதேவேளை இலங்கையின் பொருளாதார, சமூக, அரசியல் சூழலின் அபிவிருத்திக்கு தீவிரமாகப் பங்களிக்க எண்ணியுள்ளது.

2017/05/22

பிரபாத் சி பெரேரா
தலைவர்
செலசினே தொலைக்காட்சி நிறுவனம்
கொழும்பு 07

# நிறுவனத் தகவல்கள்

**பெயர்**

செலசினெ தொலைக்காட்சி நிறுவனம்

**சட்டக்கட்டமைப்பு மற்றும் கடந்தகால நிலைமை**

- 1982 பெப்ரவரி 01 ஆம் திகதி திட்டங்களை செயற்படுத்தும் அமைச்சின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது.
- 1982-1989 வரை காணி, நீர்ப்பாசன மற்றும் மகாவெலி அபிவிருத்தி அமைச்சின் கீழிருந்த அரச மரக்கூட்டுத்தாபனத்தின் மனித மற்றும் நிதி வளத்தின் கீழ் மகாவெலி உடனடி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக இலங்கை மக்களை தெளிவுபடுத்தும் பணியினை மேற்கொண்டது.
- 1989 ஜனசவிய நிகழ்ச்சித்திட்டத்தினை விளம்பரப்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொண்டது
- 1989.08.19 ஆம் திகதியுடைய 832/15 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் செலசினே நிறுவனம் இளைஞர் விவகாரங்கள், விளையாட்டு மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. (இது நிறுவனம் தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் மூலம் மேற்கொள்ளப்பட்ட முதல் சுவீகரித்தலாகும்).
- 1997.06.09 ஆம் திகதியுடைய 979/2 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் தபால், தொலைத்தொடர்புகள் மற்றும் ஊடக அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது.
- 2001.12.20 ஆம் திகதியுடைய 1215/14 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் மக்கள் தொடர்பாடல் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது.
- 2004.04.28 ஆம் திகதியுடைய 1338/9 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் தகவல் மற்றும் ஊடக அமைச்சின் கீழுள்ள நிறுவனமாக பெயரிடப்பட்டது.
- 2005.12.08 ஆம் திகதியுடைய 1422/22 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் ஊடக மற்றும் தகவல் அமைச்சின் கீழ் நிறுவனமாக ஸ்தாபிக்கப்பட்டது.
- 2007 07 ஆம் இலக்கமுடைய நிறுவன சட்டத்தின் உள்ளடக்கங்களுக்கு அமைவாக பூரண அரசுடைமையான பொதுநிறுவனமாக மாற்றுவதற்காக அமைச்சரவைக்கு 2008.03.26 ஆம் திகதி கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது.

**நிறுவனத்தின் பொறுப்புக்கள்**

- அரசின் ஊடக விளம்பரப்படுத்தல் மற்றும் தயாரிப்பு நிறுவனமாக செயற்படுதல்
- 2005.05.16 ஆம் திகதி 1380/15 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் கீழ் காட்டப்பட்டுள்ள பணிகள் நிறுவனத்தின் விடயப்பரப்பில் உள்ளடக்கப்பட்டது.
    - i. அச்சு/இலத்திரனியல் விளம்பர தயாரிப்பு
    - ii. அரசின் அபிவிருத்தி செயற்றிட்டங்கள் தொடர்பாக பொது மக்களை தெளிவுபடுத்தும் பிரச்சாரப்பணிகள்
    - iii. அரச பிரச்சார நிகழ்ச்சிகளை தயாரித்தல்
- 2008.12.02 ஆம் திகதியுடைய வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சர் கடிதம் சம்பந்தப்பட்ட பரீட்சிப்பின் பின்னர் 2008.12.24 ஆம் திகதியுடைய 08/2253/338/043 இலக்கமுடைய அமைச்சரவை பத்திரத்தின் ஊடாக அனைத்து அமைச்சுக்கள் மற்றும் அவற்றின் கீழுள்ள நிறுவனங்களின் அனைத்து விளம்பரங்கள் மற்றும் பிரச்சார நிகழ்ச்சிகளை செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளவதை கட்டாயமாக்கும் அனுமதியை பெற்றுக்கொடுத்தது
- தொலைக்காட்சி ஆவண நிகழ்ச்சிகள், வானொலி நிகழ்ச்சிகள் உட்பட தொலைக்காட்சி மற்றும் வானொலி விளம்பரங்கள் போன்ற கட்புல செவிபுல தயாரிப்புக்களை மேற்கொள்ளுதல்
- பத்திரிகை விளம்பரத்தயாரிப்பு உட்பட விளம்பரங்னை அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் ஒழுங்குபடுத்தல்.
- நிகழ்ச்சி முகாமைத்துவம் மற்றும் அச்சு வேலைகள்

# நிர்வாகக் கட்டமைப்பு – 2017

## சிரேஷ்ட முகாமைத்துவம்

| | | |
|---|---|---|
| துசித ஜெயவர்தன | - | தலைவர் (2017.01.01 - 2017.06.20) |
| ஜே.எம்.என்.எஸ்.ஜயவர்தன | - | தலைவர் (2017.06.21 - 2017.12.31) |
| சனத் தர்மரட்ன | - | பொது முகாமையாளர் |

## நிர்வாகிகள்

| | | |
|---|---|---|
| டபில்யூ.டி.ஜே.செனவிரத்ன | - | முகாமையாளர் (மனிதவளம் மற்றும் நிர்வாகம்) (2017.01.01 - 2017.10.31) |
| இ.எம்.ஏ.ஆர்.ஏக்கநாயக்க | - | முகாமையாளர் (மனிதவளம் மற்றும் நிர்வாகம்) (2017.11.31 - 2017.12.31) |
| அத்துல அன்ராதி | - | முகாமையாளர் (தயாரிப்பு) |
| அக்போ அமரசேகர | - | வாடிக்கையாளர் சேவை பணிப்பாளர் |
| நலீன் அலஹகோன் | - | முகாமையாளர் (ஊடகப்பிரிவு) |
| சாந்த லொகுகெட்டகொட | - | முகாமையாளர் (நிதி) |
| சுஜித் புஷ்பகுமார | - | முகாமையாளர் (பதில்) (வரைகலைப்பிரிவு) |

## தணிக்கை

அரச கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களம்

## வங்கியாளர்

இலங்கை வங்கி

மக்கள் வங்கி

## தொடர்பு விபரங்கள்

| | | |
|---|---|---|
| **முகவரி** | - | இல. 224, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07 |
| **தொலைபேசி** | - | 011-4320777, 011-4061586, |
| **தொலைநகல்** | - | 011-2058229 |
| **மின்னஞ்சல்** | - | selacine@gmail.com |
| **இணையத்தளம்** | - | www.selacine.lk |




# நிர்மான மற்றும் வரைகலைப்பிரிவு

செலசினே நிறுவனத்தின் திறமையான மற்றும் புதுபடைப்புகளை முன்வைக்கும் மற்றுமொரு பிரிவு நிர்மான மற்றும் வரைகலைப்பிரிவேயாகும். இப்பிரிவில் முன் அனுபவம் கொண்ட பல கலைஞர்களை கொண்ட இப்பிரிவு நிர்மானங்களுக்காக வெறும் எட்டு மணி நேரம் மாத்திரம் வேலையை செய்யாமல் எந்நேரத்திலும் ஆயத்தமாக இருக்கும் ஒரு பிரிவாகும். வரைகலையின் புதிய தொழிநுட்பங்களை கொண்டு செயற்படும் இப்பிரிவானது எந்நேரத்திலும் முன்நின்று செயற்படுவதுடன், நேரத்தை மிஞ்சியும் செயற்படும் ஒரு பிரிவாகும்.

பத்திரிக்கை விளம்பரங்களை வடிவமைத்தல், முப்பரிமாண செயற்பாடுகள், ஆண்டறிக்கை மற்றும் வெவ்வேறுபட்ட வெளியீடுகள், சுவரொட்டிகள் மற்றும் பெனர் நிர்மானம் போன்ற செயற்பாடுகளின் இடமாக திகழ்வது நிர்மான மற்றும் வரைகலைப்பிரிவேயாகும் அத்துடன் வழங்கப்படும் வேலைகளை சரியான நேரத்திற்கு எமக்கு மீளக்கையளிப்பதுடன் வாடிக்கையாளர்களிடம் இருந்து கிடைக்கும் பாராட்டிற்கு முக்கிய காரணமும் அவர்களே.

லேக்ஹவுஸ் நிறுவனத்தினால் வெளியிடப்படும் விளம்பரங்களில் அதிகபடியான விளம்பரங்களை வழங்குவது எமது நிறுவனம் என்பதோடு அவற்றை நிர்மானிப்பதில் முக்கிய இடம் நிர்மான மற்றும் வரைகலைப் பிரிவையே சாரும். குறிப்பிட்ட நேரத்திற்குள் சரியான, நேர்த்தியான விளம்பரங்களை நிர்மானிக்கும் பொறுப்பை சரியாக நிறைவேற்றி வருவதுடன் சரியாக தனது கடமைகளை செய்து வருகின்றது.

தனது சேவையை மெம்மேலும் நிறுவனத்திற்கு வழங்குவது மட்டுமல்லாமல், தமது செயற்திறனை மேலும் அபிவிருத்தி அடையச்செய்து 2017 ஆம் ஆண்டும் மிகவும் வெற்றிகரமாக செயற்பட எத்தணிக்கின்றது..

## ஊடகப்பிரிவு

ஊடகப்பிரிவின் பிரதான கடமையானது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் விளம்பரங்கள் மற்றும் கட்புல செவிபுல தயாரிப்புக்களை ஒழுங்குபடுத்தல் என்பவற்றை குறிப்பிட முடியும். அதே போல் 2017 ஆம் ஆண்டில் மிகவும் சிறந்த முறையில் மேற்குறிப்பிட விடயங்கள்

மேற்கொள்ளப்பட்டது. இங்கு மொத்த முதலீடு ரூபா.405 மில்லியன் ஆகும்.

2017 ஆம் ஆண்டில் லேக்ஹவுஸ் நிறுவனத்துற்கு அதிக விளம்பரங்கள் வழங்கப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டில் தொழிற்பயிட்சி அமைச்சு மற்றும் இலங்கை மின்சார சபைகளுக்கு செய்யப்பட்ட விளம்பரங்களின் மொத்த முதலீடு ரூபா.154 மில்லியன் ஆகும். மேல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களின் இலக்குகளை அடைய இதன் மூலம் முடிந்தது.

அதன் மூலம் இலங்கையின் முன்னனி விளம்பர நிறுவனங்களில் ஒன்று எனும் இடத்தை செலசினே நிறுவனத்திற்கு அடையக்கிடைத்தது பெரும் வெற்றியாகும்.





# விற்பனை மற்றும் வாடிக்கையாளர் சேவைப்பிரிவு

கடந்த ஆண்டை ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டில் விற்பனை பிரிவு ஒரு குறிப்பிடத்தக்க விற்பனை வளர்ச்சி வேகத்தை கொண்டிருப்பது விசேட அம்சமாகும். இந்த வருடம், ஆரம்ப விற்பனை வருவாய் ரூ.638,957,078.32 ஆக இருந்தது, மேலும் பத்திரிகை, தொலைக்காட்சி விளம்பரங்கள் மூலமாக கணிசமானதொரு வருவாயை கொண்டுள்ளது.

இந்த இலக்கினை அடைய உறுதுணையாக காணப்பட்ட எமது பிரிவின் விற்பனை நிர்வாகிகளின் சிறப்பான அர்ப்பணிப்பு மற்றும் ஏனைய பிரிவுகளில் பணியாற்றுகின்ற நிர்வாகிகள் வழங்கிய பேராதரவிற்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றிக்கூற கடமைப்பட்டுள்ளோம்.



## மனிதவள மற்றும் நிர்வாகப் பிரிவு

நிறுவனத்தில் இருக்கும் அடிப்படை வளமானது மனித வளமேயாகும். எமது நிறுவனத்தில் எதிகால பயணத்தில் எனது நோக்கம் என் இலக்கினை அடைய வேண்டும் எனும் உத்வேகத்துடன் 2017 ஆம் ஆண்டில் எம்மால் முன்னெடுக்கப்பட்ட செயற்திட்டங்கள் பின்வருமாறு.

- 33 வருட வரலாற்றில் சட்டபூர்வமாதொரு நிறுவனமாக மாற்றுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளப்படுவது இவ் ஆண்டின் பிரதான பணியாகும். அதற்கிணங்க, நிறுவன கட்டமைப்பு முறை மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைப்படுத்துவது குறிப்பிடத்தக்கது.
- 2017 ஆம் ஆண்டில் ஊழியர்களின் பயிற்சி மற்றும் வளர்ச்சியை கருத்தில் கொண்டு பல்வேறு கல்வி நிறுவனங்களால் வளங்கப்பட்ட பயிற்சிகளுக்கு ஊழியர்களை அனுப்பியதுடன் நிதி உதவிகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டது. மேலும், தொழில்சார் ஊழியர்களின் ஊழிய அபிவிருத்தி கல்வி நிறுவனங்களுக்கு கல்வி நிறுவனங்களில் தமது கற்கைகளை தொடர நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.
- ஊழியர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு ஊழியர் நலன்புரி கடன்களை பெற்றுக் கொடுத்தல், காப்புறுதி முறைகளை அறிமுகப்படுத்தல், கடன் உதவிகள் வழங்குதல் மற்றும் விழாக்களுக்கான விசேட கொடுப்பனுவுகள் வழங்கள் இடம்பெற்றது.
- ஊழியர்களை ஊக்கப்படுத்தும் முகமாக பல விசேட சலுகைகளை வழங்குதல்.
- சிறந்த சேவையை வழங்குவதற்காக ஊழியர் குழாத்தினால் கோரப்படும் உபகரணங்களை அவர்களுக்கு வழங்குதல்.



# தயாரிப்பு பிரிவு

2017 ஆம் ஆண்டில், செலசினெ நிறுவனத்தின் தயாரிப்பு பிரிவினால் பல சுவாரசியமான வடிவமைப்புகளை உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்படைப்புகள் அனைத்தும் தயாரிப்பாளர்களின் திறன்களாலும், ஒற்றுமையினாலும் மேலும் கூடுதலான சிறப்பம்சம் கொண்ட வடிவமைப்பாக மாறுவதற்கு ஏதுவாக காணப்பட்டது.

டெங்கு ஒழிப்புப்பினை மையமாக கொண்ட நான்கு தொலைக்காட்சி விளம்பரங்கள் தயாரிக்கப்பட்டது. மேலும் பொலிதீன் பாவனையை ஒழித்தலை கருப்பொருளாகக் கொண்டு "நமது கையில் நான்கு பிழைகள்" எனும் தலைப்பின் கீழ் சிறந்த விளம்பரத் தயாரிபொன்றை மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு வழங்கியுள்ளது. அரசாங்க தகவல் திணைக்களத்திற்காக தயாரிக்கப்பட்ட அறிக்கை திட்டமானது 2017 ஆம் ஆண்டில் சிறந்த ஒரு படைப்பெனக் கூறலாம்.

ஒவ்வொரு வருடமும் தமது நிர்மாணத்திறனின் மூலம் ஒரு படி மேலே செல்லும் செலசினே நிறுவனத்தின் தயாரிப்பு பிரிவு புதிய தொழிநுட்பத்துடன் பல சிறப்பான தயாரிப்புகளை மேற்கொண்டுள்ளதுடன், எதிர்காலத்திலும் சிறப்பாக செயற்பட தயாராக உள்ளது.



# நிதிப் பிரிவு

செலசினே நிறுவனத்தின் கணக்கியல் பிரிவின் செயற்பாடுகளை சிறப்புற மேற்கொள்ள பல செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆண்டறிக்கைகள் விலைவாக செய்யப்படுகின்றன. 2011,2012,2015,2016 ஆண்டுகளை போலவே மீண்டும் ஒரு முறை 2017.12.31 ஆம் திகதிக்கு செலசினே தொலைக்காட்சி நிறுவனம் நிதி நிலை மற்றும் அன்றுடன் முடிவடைந்த வருடத்தின் நிதி செயற்பாடுகள் மற்றும் பணப்புலக்கம். இலங்கை அரச கணக்கியல் தரத்திற்கு அமைவாக உண்மையான மற்றும் நேர்மையான அபிப்ராயத்தை வழங்க வேண்டியது வெற்றிக்கான ஒரு முயற்சியே ஆகும்.

கணக்காய்வாளரின் ஆலோசனையை முன்வைக்கும் போது கவனத்தில் கொள்ளவேண்டிய நிதி பிரிவில் கணக்கியல் செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது அதன் தரத்தை பேண வேண்டிய செயற்பாடுகளை குறிப்பிடல் வேண்டும்.




## நிகழ்ச்சி முகாமைத்துவப் பிரிவு

2015 ஆம் ஆண்டு புதியதொரு பிரிவாக ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சி முகாமைத்துவப்பிரிவானது நிறுவனத்திற்கு வருவாயை பெற்றுத்தரும் ஒரு பிரிவாக தற்போது உள்ளது. புதிய பல திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் மூலம் எதிர்காலத்திலும் இப்பிரிவு சிறப்பாக செயற்படும்.

2016 ஆம் ஆண்டு 48 மில்லியன் வருமானத்தை பெற்றுத்தந்ததுடன் 2017 ஆம் ஆண்டு இப்பிரிவு 150 மில்லியன் வருவாயை பெற்றுத்தந்து கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் பாரிய வளர்ச்சி வீதத்தை காட்டுகின்றது. அதற்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை நிகழ்ச்சி முகாமைத்துவபிரிவு மேற்கொண்டுள்ளது.


- நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் நடத்தப்பட்ட ஜனாதிபதி திரைப்பட விருதுகள் விழா
- விளையாட்டுத் துறை அமைசசினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய விளையாட்டு விழா
- ஐக்கிய நாடுகள் சபையின் வெசாக் தினக் கொண்டாட்டம் (புத்தசாசன அமைச்சு)
- நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் நடத்தப்பட்ட ஏற்பாடு செய்யப்பட்ட "பாட்டு நிகழ்ச்சி" (நல்லிணக்கம் குறித்தான)
- நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு ஒழுங்கமைக்கப்பட்ட "77 கழகங்கள்"
- சுகாதார அமைச்சினால் ஏற்பாடு செய்த நெவில் பெர்னாண்டோ மருத்துவமனை அரசாங்கத்திற்கு கையளிக்கும் நிகழ்வு

செயற்பாடுகளுக்காக நிகழ்ச்சி முகாமைத்துவப்பிரிவானது சிறப்பான தொரு பிரதிபலனை வழங்கியதுடன் அச்செயற்பாடுகளை சிறந்த விதத்தில் செய்து முடிக்கவும் அவர்களால் முடிந்தது. இவ்வாண்டு அவர்கள் பெற்ற முன்அனுபவத்துடன் 2018 ஆம் ஆண்டில் மேலும் அவர்களின் வருவாயை அதிகரித்துக்கொள்வதே அவர்களின் எதிர்ப்பார்ப்பாகும்.


# நிதியறிக்கை 2017




**வருமான வளர்ச்சி**




**கடந்த 05 வருடங்களினுள் வருமானம் மற்றும் செலவு**



# 2013-2017 ஆம் வருடங்களுக்கிடையில் நிறுவனத்தின் இலாபப் போக்கு



# நிதி அறிக்கைக்கான குறிப்புக்கள்

**2017 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான**

**1. நிறுவனத் தகவல்கள்**

1.1 பொதுவானவை

செலாசினே தொலைக்காட்சி நிறுவனமானது (இதன் பின்னர் செலாசினே என்று அழைக்கப்படும்) 2017.06.09 ஆம் திகதிய 2022/34 எனும் இலக்கமுடைய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் நிதி மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சின் விடயதானத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

1.2 பிரதான செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளின் தன்மை

நிறுவனத்தின் பிரதான செயற்பாடுகள் விளம்பரப்படுத்தல், தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகள் தயாரிப்பு மற்றும் நிகழ்ச்சி ஒழுங்கமைப்பு என்பனவாகும்.

1.3 ஊழியர்களின் எண்ணிக்கை

2017.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு 69 ஊழியர்கள் பணியாற்றியுள்ளார்கள்.

**2. கணக்கியல் கொள்கை தொடர்பில் முக்கிய அம்சங்களின் சாராம்சம்**

2.1 பொதுவான கொள்கைகள்

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைய தயாரிக்கப்பட்டதாகும். இலங்கை ரூபாவில் தயாரிக்கப்பட்டுள்ள நிதிசார் கூற்றுக்கள் தொடர்ந்து இயங்கும் நிறுவனம் என்ற அடிப்படையில் தயாரிக்கப்பட்டது.

2.2 நிலைத்தன்மை மற்றும் ஒப்பீடு

இவ் வருடத்தில் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் முந்திய வருடங்களில் பின்பற்றப்பட்ட கணக்குக் கொள்கைகளுடன் இணக்கப்பாடானதாக உள்ளது.

2.3 கடன் செலவுகள்

கடன் செலவுகள் அவை மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் எந்தத் தொகையும் மூலதனமாக்கப்படாது செலவினமாக இனங்காணப்பட்டுள்ளது.

**3. சொத்து மதிப்பிடுதலும், அவை மதிப்பிடும் அடிப்படையும்**

3.1 ஆதனங்கள், பொறித் தொகுதி மற்றும் சாதனங்கள்

செலவு அல்லது அளவு மதிப்பீட்டின் அடிப்படையில் ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் சாதனங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன.

3.2 வியாபார மற்றும் ஏனைய கிடைக்கவேண்டியவை

வியாபார மற்றும் ஏனைய கிடைக்கவேண்டியவை மதிப்பிடப்பட்ட தீர்வைப் பெறுமதி அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3.3 காசும், காசுக்கு சமமானவையும்

காசும், காசுக்கு சமமானைவும் என்பது கையிலுள்ள காசு மற்றும் கோரிக்கை வைப்புக்களையும், துரித கதியில் தெரிந்த பெறுமானத்தில் காசுக்கு மாற்றக்கூடியதாகவும், பெறுமான மாற்றத்தில் குறிப்பிடப்பட்ட தீங்கெதனையும் விளைவிக்காததும், கூடிய திரவத் தன்மையுடைய குறுகிய கால முதலீடுகளுமாகும்.

3.4 தேய்மானம்

தேய்மானமானது ஒவ்வொரு சொத்தினதும் அதன் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக் காலப் பகுதிக்குள்ளானவாறு நேர்கோட்டு முறையின் பிரகாரம் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. நிதிக் குத்தகையின் கீழுள்ள சொத்துக்கள், குத்தகைக் காலப் பகுதியின் குறுகிய காலத்திற்கும், சமமான சொந்தச் சொத்துக்களின் பயன்பாட்டு காலப் பகுதிக்கும் ஏற்ப தேய்மானம் செய்யப்பட்டுள்ளன. நிலையான சொத்துக்களுக்குரிய தேய்மான விகிதம் திருத்தப்பட்டுள்ளது. சமகால மற்றும் ஒப்பீட்டளவு காலப் பகுதிக்கு மதிப்பீடு செய்யப்பட்ட பயன்பாட்டு காலம் வருமாறு:

| | |
|---|---|
| தளபாடங்களும் பொருத்துதலும் | 2 - 10 வருடங்கள் |
| கணனி சாதனங்கள் | 3 - 5 வருடங்கள் |
| அலுவலக சாதனங்கள் | 10 வருடங்கள் |
| மோட்டார் வாகனங்கள் | 5 வருடங்கள் |
| புகைப்படக் கருவி, படமெடுக்கும் சாதனங்கள் | 10 வருடங்கள் |
| கணனி மென்பொருட்கள் | 10 வருடங்கள் |

**4. பொறுப்புக்களும், ஒதுக்கீடுகளும்**

4.1 ஐந்தொகை தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள் செலுத்தவேண்டியவை அல்லது கோரிக்கை அடிப்படையில் செலுத்தவேண்டிய கடப்பாடுகள் என்பன நடைமுறைப் பொறுப்புக்களென ஐந்தொகையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஐந்தொகைத் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குப் பின்னர் முடிவடையவுள்ள கடப்பாடுகள் நடைமுறைப் பொறுப்புக்கள் அல்லாதவையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

4.2 ஓய்வூதிய, நலன்புரி செலவுகள்

இகநி 16 (2006 இல் திருத்தப்பட்டது) ஊழியர் நலன்புரிக்கமைய சகல ஊழியர்களுக்கும் சேவையின் முதலாவது வருடத்திலிருந்து ஓய்வூதிய நலன்புரிகளுக்கான ஒதுக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் 1983 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்திற்கமைய தொடர்ச்சியாக 05 வருட சேவையினைப் பூர்த்திசெய்த பின்னரே ஊழியர் ஒருவருக்கான பொறுப்பு ஏற்புடையதாகிறது.

4.3 நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - ஊ.சே.நி மற்றும் ஊ.ந.நி

நியதிச் சட்டங்களுக்கும் பிரமாணங்களுக்கும் அமைய ஊழியர்கள், ஊழியர் சேமலாப நிதி பங்களிப்புகள் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்புகளுக்கு தகுதியுடையவர்களாவார்கள். இந் நிறுவனமானது ஊழியர்களின் மொத்த வேதனாதிகளின் 15% மற்றும் 3% க்கான தொகையினை முறையே ஊழியர் சேமலாப நிதியத்திற்கும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்பு செய்கிறது.

**5. வருமானக் கூற்று**

5.1 மொத்த விற்பனவு

செலசினேயின் மொத்த விற்பனையானது கலை வேலைப்பாடுகள், அட்டவணைப்படுத்தல், தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகள் தயாரிப்பு, நிகழ்வு முகாமைத்துவம், மற்றும் சமூக ஊடகங்களிலிருந்து பெறப்படுகின்றவையாகும்.

5.2 வருமானம் இனங்காணல்

பொருளாதாரத்தின் நன்மைகள் நிறுவனத்திற்கு கிடைக்கும் வண்ணமும், வருமானமானது நம்பத்தகுந்த விதத்தில் அளவிடக்கூடியதாவும் வருமானம் இனங்காப்பட்டுள்ளது.

5.3 செலவு இனங்காணல்

வருமானக் கூற்றில் செலவுகளானது ஏற்பட்ட செலவுக்கும், வருமானத்தின் குறிப்பிட்ட விடயங்களுக்கான உழைப்பிற்கும் இடையிலான நேரடித் தொடர்பின் அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளது.

**6. சம்பந்தப்பட்ட நபர்களுடனான கொடுக்கல் வாங்கல்**

நிதிக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள காலப் பகுதியில் எந்தவொரு சம்பந்தப்பட்ட நபர்களுடனும் எவ்வித கொடுக்கல் வாங்கல்களும் செய்யப்படவில்லை.

**7. ஐந்தொகைத் திகதியின் பின்னர் இடம்பெறும் நிகழ்வுகள்**

ஐந்தொகைத் திகதியின் பின்னர் நிதிக் கூற்றுக்களில் சீராக்கல்களையோ, வெளிப்படுத்தல்களையோ செய்யவேண்டிய அளவிலான நிகழ்வுகள் இடம்பெறவில்லை.

**8. இலங்கை மத்திய வங்கியின் அறிவுறுத்தல்களின்படி பிரமுக வங்கியில் வைப்பிலிடப்பட்டிருந்த ரூபா 300,000 இலங்கை வங்கி சேமிப்பு கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது.**

**9. அறவிடமுடியாத மற்றும் ஐயமான கடன்பட்டோருக்காக 2.5% மும், இனங்காணப்படாத கடன்பட்டோர் ஆண்டு 2006 க்காக முழுமையயாகவும் ஒதுக்கங்கள் செய்யப்பட்டுள்ளன.**

**10. 10.1** இரண்டு ஊழியர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**10.2** கணக்காய்வு விசாரணையின் பிரகாரம் தற்போது பயன்பாட்டிலுள்ள 2.2.2 தேய்மானம் செய்யப்பட்ட பொருளை நிறுவனத்தினால் மீள்மதிப்பீடு செய்ய இயலாதுள்ளது. 2018 இல் மதிப்பீடு செய்யப்பட்டு இறுதிக் கணக்கில் பதிவு செய்யப்படும்.

# வருமான அறிக்கை

**2017 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடைந்த வருமான அறிக்கை இலங்கை ரூபாவின் படி**

| | பதிவு | 2017<br>ரூ. | 2016<br>ரூ. | 2015<br>ரூ. |
|---|---|---|---|---|
| வருமானம் | 11 | **637,351,163.32** | **397,692,282.97** | **267,617,260.35** |
| நேர் செலவுகள் | 12 | 541,297,909.69 | 342,085,817.84 | 229,795,974.66 |
| **மொத்த இலாபம் / நட்டம்** | | **96,053,253.63** | **55,606,465.13** | **37,821,285.69** |
| ஏனைய வருமானம் | 13 | 4,379,747.31 | 4,783,264.44 | 4,076,455.43 |
| | | **100,433,000.94** | **60,389,729.57** | **41,897,741.12** |
| நிர்வாக மற்றும் தாபனச் செலவுகள் | 14 | (71,096,270.58) | (62,608,575.31) | (52,893,943.60) |
| விற்பனை மற்றும் விநியோக செலவுகள் | 15 | (26,231,866.42) | (17,086,815.43) | (16,402,573.28) |
| **நடைமுறையிலிருந்து இலாபம்** | | **3,104,863.94** | **(19,305,661.17)** | **(27,398,775.76)** |
| நிதிசார் மற்றும் ஏனைய செலவுகள் | 16 | (124,084.60) | (180,985.45) | (152,403.98) |
| ஏனைய செலவுகள் | 17 | (1,770,342.59) | (6,142,345.59) | (986,284.07) |
| **வரிவிதிப்புக்கு முன்னரான தேறிய இலாபம்/நட்டம்** | | **1,210,436.75** | **(25,628,992.21)** | **(28,537,463.81)** |
| **வரிவிதிப்புக்கு பின்னரான தேறிய இலாபம்/நட்டம்** | | **1,210,436.75** | **(25,628,992.21)** | **(28,537,463.81)** |
| ஆண்டுக்கான ஏனைய விரிவான வருமானம் | | | | |
| **ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம் இலாபம்/நட்டம்** | | **1,210,436.75** | **(25,628,992.21)** | **(28,537,463.81)** |

# ஐந்தொகை

31 டிசம்பர் 2017 அன்று உள்ளவாறான

| | பதிவு | 2017 ரூ. | 2016 ரூ. | 2015 ரூ. |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| **நடைமுறை அல்லாதவை** | | | | |
| ஆதனங்கள், பொறித்தொகுதிகள், சாதனங்கள் | 18 | 11,170,153.95 | 12,608,937.31 | 18,479,716.12 |
| தொட்டுணர முடியாத சொத்துக்கள் | 18-A | 3,460,377.76 | 3,999,830.83 | - |
| கட்டட செலவுகள் | | 3,684,124.10 | 5,526,186.14 | 7,368,248.18 |
| **மொத்த நடைமுறை அல்லாத சொத்துக்கள்** | | **18,314,655.81** | **22,134,954.28** | **25,847,964.30** |
| **நடைமுறை** | | | | |
| முதலீடுகள் | 19 | 898,200.00 | 898,200.00 | 898,200.00 |
| வியாபாரம் கிடைக்கவேண்டியவை | 20 | 390,651,319.86 | 214,490,075.74 | 238,609,747.46 |
| ஏனைய கிடைக்கவேண்டியவை | 21 | 1,662,656.66 | 1,944,593.80 | 752,235.75 |
| கையிலும், வங்கியிலும் உள்ள காசு | 22 | 31,416,455.80 | 8,559,416.92 | 8,685,944.63 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | **424,628,632.32** | **225,892,286.46** | **248,047,927.84** |
| **மொத்த சொத்துக்கள்** | | **442,943,288.13** | **248,027,240.74** | **274,794,092.14** |
| **ஒப்புரவும், பொறுப்புக்களும்** | | | | |
| **ஒப்புரவு** | | | | |
| நிறுத்திவைக்கப்பட்ட உழைப்பு | | 70,209,475.81 | 57,883,448.68 | 98,854,157.55 |
| **மொத்த ஒப்புரவு** | | **70,209,475.81** | **57,883,448.68** | **98,854,155.92** |
| **பொறுப்புக்கள்** | | | | |
| **நடைமுறை அல்லாதவை** | | | | |
| செலுத்தவேண்டிய பணிக்கொடை | 23 | 9,692,481.86 | 8,639,956.56 | 6,930,220.29 |
| வட்டியுடனான கடன்களும், கடன்படலும் | 24 | - | - | |
| திறைசேரி கடன் | | - | 465,000.00 | 1,860,000.00 |
| **மொத்த நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்** | | **9,692,481.86** | **9,104,956.56** | **8,790,220.29** |
| **நடைமுறை** | | | | |
| வட்டியுடனான கடன்களும், கடன்படலும் | 24 | - | - | 384,615.48 |
| வியாபாரமும், செலுத்தவேண்டிய ஏனையவையும் | 25 | 362,911,778.46 | 179,049,283.50 | 164,775,546.82 |
| திறைசேரி கடன் | | - | 1,860,000.00 | 1,860,000.00 |
| பெற்றுக்கொண்ட முற்பணம் | | 129,552.00 | 129,552.00 | 129,552.00 |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | **363,041,330.46** | **181,038,835.50** | **167,149,714.30** |
| **மொத்த ஒப்புரவும், பொறுப்புக்களும்** | | **442,943,288.13** | **248,027,240.74** | **274,794,092.14** |

1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரகாரமும், இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் ஏற்படுத்தப்பட்ட இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமனங்களின் தேவையின் பிரகாரமும் இந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

உண்மையானது என பணிப்பாளர்களினால் உறுதிப்படுத்தப்படுகின்றது.

கையெழுத்திட்டது



உமா இராஜ மந்திரி,
தலைவி,
செலசினெ தொலைக்காட்சி நிறுவனம்

# காசுப் பாய்ச்சல் கூற்று

**2017 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான**

| | 2017<br>ரூ. | 2016<br>ரூ. |
|---|---|---|
| **நடைமுறை செயற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| வரிவிதிப்புக்கு முன்னரான தேறிய இலாபம் | 1,210,436.75 | (25,628,992.21) |
| **சீராக்கல் ;** | | |
| குத்தகை வட்டி | - | 24,001.85 |
| வட்டி வருமானம் | (99,309.82) | (145,449.20) |
| தேய்மானம் | 4,001,678.11 | 4,353,470.40 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 1,052,525.30 | 2,534,524.27 |
| வெளியேற்றப்பட்ட ஆதனம் மீதான இலாபம்/(நட்டம்) | 61,369.34 | - |
| முன்னைய ஆண்டுகளில் சீராக்கல்கள் | 11,115,590.38 | (15,341,716.66) |
| **தொழிற்படுமுதல் மாற்றத்திற்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்** | **17,342,290.06** | **(34,204,161.55)** |
| வியாபாரம் மற்றும் ஏனைய கிடைக்கவேண்டியவையில் (அதிகரிப்பு)/குறைவு | (177,126,051.07) | 24,312,157.75 |
| வைப்புக்கள் மற்றும் முற்செலுத்தப்பட்டவையில் (அதிகரிப்பு)/குறைவு | 281,937.14 | (1,192,358.05) |
| வியாபார கடன் மற்றும் பிற கொடுப்பனவுகளின் (அதிகரித்தல்/குறைவடைதல்) | 183,862,494.96 | 14,273,736.68 |
| முற்பணம் பெற்றுக்கொண்டதில் (அதிகரிப்பு)/குறைவு | - | - |
| கட்டட செலவுகளுக்கான ஏற்பாடு (அதிகரிப்பு)/குறைவு | - | - |
| **செயற்பாட்டுக்கு (பயன்படுத்திய) பெறப்பட்ட காசு** | **24,360,671.09** | **3,189,374.83** |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | - | 824,788.00 |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து/பயன்படுத்திய தேறிய காசு** | **24,360,671.09** | **4,014,162.83** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| ஆதனங்கள், பொறித்தொகுதிகள், சாதனங்கள் கொள்வனவு | (1,602,942.02) | (2,482,522.42) |
| வட்டி வருமானம் | 99,309.82 | 145,449.20 |
| நிலையான வைப்புக்கள் | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து (பயன்படுத்திய)/தேறிய காசு** | **(1,503,632.20)** | **(2,337,073.22)** |
| **நிதிசார் நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| திறைசேரி கடன் கிடைக்கப்பெற்றது.்.திருப்பி செலுத்தியது | - | (1,395,000.00) |
| கடன்கள் திருப்பிச் செலுத்தியது | - | (408,617.33) |
| குத்தகையில் பிழை திருத்தம் | - | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து/பயன்படுத்திய தேறிய காசு** | **-** | **(1,803,617.33)** |
| **காசிலும், காசுக்கு சமமானவற்றிலும் தேறிய குறைவு** | **22,857,038.89** | **(126,527.72)** |
| வருட ஆரம்பத்தில் காசும், காசுக்கு சமமானவையும் (குறிப்பு அ) | 8,559,416.91 | 8,685,944.63 |
| **வருட முடிவில் காசும், காசுக்கு சமமானவையும் (குறிப்பு அ)** | **31,416,455.80** | **8,559,416.91** |

# காசுப் பாய்ச்சல் கூற்று

2017 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான

| | 2017<br>ரூ. | 2016<br>ரூ. |
|---|---|---|
| **குறிப்பு அ** | | |
| **காசும், காசுக்கு சமமானவையும்** | | |
| இவ. - க.இல. 2323299 | 29,724,501.94 | 3,251,155.41 |
| இவ. - சேமிப்பு க.இல. 2329765 | 291,145.04 | 1,662,698.51 |
| மக்கள் வங்கி 200100130005980 | 791,574.32 | - |
| தயாரிப்பு முற்பணம் | 424,234.50 | 2,090,853.00 |
| ஏனைய முற்பணம் | 185,000.00 | 1,554,710.00 |
| | **31,416,455.80** | **8,559,416.92** |

# ஒப்புரவில் மாற்றங்கள் பற்றிய கூற்று

2017 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான

| | 2017<br>ரூ. |
|---|---|
| | **இலாபம்** |
| 2017 ஜனவரி 01 அன்று மீதி | 57,883,448.68 |
| முன்னைய ஆண்டுகளில் சீராக்கல்கள் - குறிப்பு 28 | 11,115,590.38 |
| ஆண்டில் தேறிய இலாபம்/நட்டம் | 1,210,436.75 |
| **2017 டிசம்பர் 31 ஆம் அன்று மீதி** | **70,209,475.81** |

# நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**2017 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான**

| | 2017 ரூ. | 2016 ரூ. | 2015 ரூ. |
|---|---|---|---|
| **குறிப்பு - 11 - வருமானம்** | | | |
| தயாரிப்பு | 32,661,878.25 | 19,865,749.83 | 15,921,580.75 |
| வரைவியல் | 48,299,073.00 | 13,492,843.62 | 21,276,109.47 |
| அட்டவணை தயாரித்தல் | 405,675,446.93 | 314,834,334.00 | 193,993,826.89 |
| நிகழ்வு முகாமைத்துவம் | 150,487,265.14 | 48,150,355.52 | 36,425,743.24 |
| நானாவிதமானவை | 82,500.00 | 84,000.00 | - |
| வலை வருமானம் | 145,000.00 | 1,265,000.00 | - |
| | **637,351,163.32** | **397,692,282.97** | **267,617,260.35** |
| **குறிப்பு - 12 - நேரடி செலவுகள்** | | | |
| தயாரிப்பு செலவுகள் | 28,656,917.64 | 17,141,833.00 | 12,756,525.65 |
| வரைவியல் செலவுகள் | 33,511,635.16 | 13,965,362.04 | 19,381,442.68 |
| அட்டவணை தயாரிக்கும் செலவுகள் | 347,405,543.49 | 272,997,261.84 | 156,980,159.97 |
| நிகழ்வு முகாமைத்துவ செலவுகள் | 131,586,313.40 | 36,804,690.96 | 40,677,846.36 |
| வலை செலவுகள் | 137,500.00 | 1,176,670.00 | - |
| நானாவிதமானவை | - | - | - |
| | **541,297,909.69** | **342,085,817.84** | **229,795,974.66** |
| **குறிப்பு - 13 - ஏனைய வருமானங்கள்** | | | |
| பணியாளர் கடன் வட்டி | 116,790.59 | 107,321.49 | 76,971.89 |
| வங்கி வட்டி | 99,309.82 | 145,449.20 | 3,340,568.09 |
| ஏனைய வருமானம் | 3,531,849.90 | 4,425,393.75 | 281,000.00 |
| வழங்குதல் பதிவு | 312,000.00 | 9,500.00 | 111,500.00 |
| மொழிப்பெயர்ப்பு கட்டணங்கள் | - | 80,000.00 | - |
| கலை வேலை கட்டணங்கள் | 281,000.00 | - | 126,000.00 |
| போக்குவரத்து கட்டணங்கள் | 38,797.00 | 15,600.00 | 140,415.45 |
| | **4,379,747.31** | **4,783,264.44** | **4,076,455.43** |

# நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

2017 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான

| | 2017<br>ரூ. | 2016<br>ரூ. | 2015<br>ரூ. |
|---|---|---|---|
| **குறிப்பு - 14 - நிர்வாக மற்றும் தாபன செலவுகள்** | | | |
| படி - தலைவர் | 1,547,928.00 | 1,500,000.00 | - |
| படி - ஒப்பந்த சேவைகள் | 945,924.66 | 712,150.00 | 500,000.00 |
| படி - பயிற்சி பெறுபவர்கள் | 176,250.00 | 652,133.36 | 329,989.25 |
| படி - போக்குவரத்து | 900,000.00 | 560,000.00 | - |
| படி - எரிபொருள் | 290,065.26 | 448,100.32 | 457,264.84 |
| படி - மொபைல்கள் | 156,000.00 | 156,000.00 | 119,964.29 |
| கணக்காய்வு கட்டணம் | 120,000.00 | 110,000.00 | 192,120.00 |
| சபை கூட்ட கட்டணம் | 45,000.00 | - | |
| மிகையூதியம் | 662,125.00 | 680,500.00 | 720,000.00 |
| கட்டட செலவுகள் | 1,842,062.04 | 1,842,062.04 | 1,842,062.04 |
| கட்டட வாடகை செலவுகள் - திரைப்படக் கூட்டுத்தாபனம் | 3,780,000.00 | 3,780,000.00 | 3,780,000.00 |
| கட்டட வாடகை செலவுகள் - ராஜகிரிய அலுவலகம் | 733,335.84 | 565,390.32 | - |
| சுத்தம் மற்றும் சுகாதாரத்துக்கான பொருட்கள் செலவு | 80,186.00 | 119,658.00 | 28,981.26 |
| கணனி திருத்தவேலை செலவு | 26,480.00 | 118,041.11 | 37,178.89 |
| ஆலோசனை கட்டணம் | 50,000.00 | - | 15,000.00 |
| தேய்மானம் | 2,641,533.37 | 2,230,019.53 | 2,092,213.70 |
| பணிப்பாளரின் வரும்படி | 505,500.00 | 647,483.33 | 1,187,364.28 |
| நன்கொடை | 553,400.00 | 453,199.56 | 68,000.00 |
| மின்சாரம் | 790,952.95 | 462,481.24 | 297,898.14 |
| ஊ.செ.நி | 2,541,168.90 | 2,436,156.27 | 2,072,097.63 |
| ஊ.ந.நி | 507,727.05 | 429,730.96 | 414,419.84 |
| வெளிநாட்டு பயணம் | - | 298,759.80 | - |
| கொடை உறுதிச்சீட்டு செலவு | 646,847.50 | 288,000.00 | 532,000.00 |
| பணிக்கொடை | 1,184,500.55 | 2,534,524.27 | 1,566,953.64 |
| இணைய கட்டணம் | 447,271.63 | 203,030.66 | 253,449.27 |
| தொழிலாளர் செலவு | 39,895.00 | - | - |
| நானாவித செலவுகள் | 11,000.00 | - | 4,985.00 |
| புதின பத்திரிகைகள் | 118,145.00 | 60,492.00 | 64,975.00 |
| அலுவலக சாதன பராமரிப்பு | 79,135.00 | 81,088.00 | 350,300.00 |
| அலுவலக பராமரிப்பு செலவு | 672,398.47 | 96,466.00 | 217,653.39 |
| அபராதமும் மேலதிகக் கட்டணமும் | 102,564.57 | 6,510.20 | - |
| தபாற்செலவு | 28,970.00 | 38,141.00 | 37,375.48 |
| அச்சிடுதலும் காகிதாதிகளும் | 1,475,598.52 | 1,534,437.69 | 802,975.27 |
| புதுப்பித்தல் கட்டணம் - ஒப்பந்தம் | 12,000.00 | 27,500.00 | - |
| பதிவுக் கட்டணம் | 90,665.00 | 119,000.00 | 74,540.00 |
| சம்பளங்களும் கூலிகளும் | 37,732,241.83 | 31,958,987.77 | 29,069,519.36 |
| பாதுகாப்பு சேவைகள் செலவு | 1,073,830.00 | 1,151,172.00 | 657,600.00 |
| தொழில்முறை கட்டணம் | - | - | 140,000.00 |

# நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**2017 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான**

| | 2017<br>ரூ. | 2016<br>ரூ. | 2015<br>ரூ. |
|---|---|---|---|
| சமூக நலன் | - | 75,500.00 | 59,897.00 |
| இட வாடகை (தற்காலிகமானது) | 3,000.00 | - | - |
| பணியாளர் காப்புறுதி | 2,545,397.07 | 1,451,568.31 | 1,282,879.58 |
| பணியாளர் மேலதிக நேரமும் படியும் | 2,231,596.43 | 1,775,515.02 | 1,277,369.38 |
| பணியாளர் நலன் | 868,703.05 | 793,292.59 | 506,004.59 |
| தொலைபேசி கட்டணம் | 577,366.85 | 515,270.46 | 382,777.86 |
| கேள்வி கட்டணம் | 24,500.00 | 32,000.00 | 29,000.00 |
| பயிற்சி நிகழ்ச்சி கட்டணம் | 118,250.00 | 447,865.60 | 50,000.00 |
| மொழிபெயர்ப்பு கட்டணம் | 209,800.00 | 261,500.00 | 137,350.00 |
| வாகன வாடகை | 1,605,000.00 | 780,000.00 | 1,140,000.00 |
| நீர் | 284,155.04 | 156,927.90 | 76,334.02 |
| வலைகடப்பிடம் செலவு | 17,800.00 | 17,920.00 | 25,450.00 |
| | **71,096,270.58** | **62,608,575.31** | **52,893,943.00** |

**குறிப்பு - 15 - விற்பனை மற்றும் விநியோக செலவுகள்**

| | 2017<br>ரூ. | 2016<br>ரூ. | 2015<br>ரூ. |
|---|---|---|---|
| கலைவேலை செலவு | 2,001,522.00 | 95,000.00 | - |
| அறவிடமுடியாத கடன | 2,994,377.69 | (601,208.77) | 2,398,952.77 |
| ஒருங்கிணைப்பு கட்டணம் | 485,510.00 | 170,900.00 | - |
| தேய்மானம் - மோட்டார் வாகனம் | 708,191.67 | 1,567,164.80 | 1,567,164.80 |
| எரிபொருள் | 789,748.34 | 837,935.89 | 861,068.32 |
| மோட்டார் வாகன திருத்தவேலையும், பராமரிப்பும் | 924,967.40 | 1,111,799.26 | 495,798.36 |
| அச்சிடும் படிக்கட்டு செலவு | 68,254.00 | 14,587.00 | - |
| விற்பனை தரகு | 1,748,539.59 | 921,832.46 | 783,132.78 |
| விற்பனை உயர்ச்சியும், விளம்பர செலவும் | 526,365.69 | 85,630.00 | 31,630.00 |
| விசேட கழிவு | 15,196,477.91 | 12,467,591.92 | 10,111,720.38 |
| விசேட நிகழ்வு செலவு | 444,800.00 | - | - |
| விசேட அறவிடல் ஆணைக்குழு | 5,000.00 | - | - |
| முத்திரை கட்டணம் | 16,355.40 | - | - |
| பிரயாண போக்குவரத்தும், தரிப்பும் | 174,448.82 | 215,143.96 | 75,921.74 |
| வாகன காப்புறுதி | 147,307.91 | 200,438.91 | 77,184.13 |
| | **26,231,866.42** | **17,086,815.43** | **16,402,573.28** |

**குறிப்பு - 16 - நிதிசார் செலவுகள்**

| | 2017<br>ரூ. | 2016<br>ரூ. | 2015<br>ரூ. |
|---|---|---|---|
| வங்கி கட்டணங்கள் | 103,220.70 | 134,538.70 | 61,433.53 |
| உத்தரவுச் சீட்டும் காப்புறுதியும் | 20,863.90 | 15,157.48 | 18,276.17 |
| குத்தகை வட்டி | - | 24,001.85 | 72,694.28 |
| தடுத்துவைத்த வரி | - | 7,287.42 | - |
| | **124,084.60** | **180,985.45** | **152,403.98** |

# நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

2017 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான

| | 2017<br>ரூ. | 2016<br>ரூ. | 2015<br>ரூ. |
|---|---|---|---|
| **குறிப்பு - 17 - ஏனைய செலவுகள்** | | | |
| நிலை மாறுதல் - கணக்கியல் மென்பொருள் | 309,998.00 | 214,331.00 | 211,804.00 |
| நிலை மாறுதல் - வலைப்பின்னல் அமைப்பு | 341,955.07 | 341,955.07 | 341,955.07 |
| ஊழியர்களுககு நட்டஈடு | - | 350,000.00 | - |
| செலவுகள் - ராஜகிரிய | 187,260.18 | 33,208.00 | - |
| சொத்துக்கள் விற்பனையிலிருந்து இலாபம்/நட்டம் | 61,369.34 | - | - |
| சில்லறை | 55,265.00 | 322,722.55 | - |
| சட்ட கட்டணம் | 797,130.00 | 730,800.00 | 351,375.00 |
| ஏனைய செலவுகள் | 17,365.00 | 4,149,328.97 | 81,150.00 |
| | **1,770,342.59** | **6,142,345.59** | **986,284.07** |

**குறிப்பு - 18 - ஆதனங்கள், பொறித்தொகுதிகள், சாதனங்கள்**

| | 01.01.2017<br>அன்று பெறுமதி<br>Rs. Cts. | சேர்த்தவை/<br>மாற்றல்<br>Rs. Cts. | (வெளி யேற்றியவை)/<br>மாற்றல்<br>Rs. Cts. | 31.12.2017<br>அன்று பெறுமதி<br>Rs. Cts. |
|---|---|---|---|---|
| **18.1 மொத்த கொண்டுவரும் தொகைகள்** | | | | |
| தளபாடங்களும் பொருத்தலும் | 3,193,523.29 | 352,473.19 | 109,075.00 | 3,436,921.48 |
| கணனி சாதனங்கள் | 6,859,363.00 | 482,538.00 | - | 7,341,901.00 |
| அலுவலக சாதனங்கள் | 4,303,198.88 | 564,130.83 | - | 4,867,329.71 |
| மோட்டார் வாகனங்கள் | 9,080,824.00 | - | - | 9,080,824.00 |
| புகைப்படக்கருவியும், படல சாதனமும் | 14,757,900.00 | 91,300.00 | - | 14,849,200.00 |
| | **38,194,809.17** | **1,490,442.02** | **109,075.00** | **39,576,176.19** |

| | 01.01.2017<br>அன்று மீதி<br>Rs. Cts. | ஆண்டுக்கான<br>கட்டணம்/<br>மாற்றல்<br>Rs. Cts. | (வெளி யேற்றியவை)/<br>(பிழை திருத்தம்)<br>மாற்றல்<br>Rs. Cts. | 31.12.2017<br>அன்று மீதி<br>Rs. Cts. |
|---|---|---|---|---|
| **18.2 தேய்மானம்** | | | | |
| தளபாடங்களும் பொருத்தலும் | 1,446,268.83 | 248,715.14 | 18,305.66 | 1,676,678.31 |
| கணனி சாதனங்கள் | 5,121,957.23 | 968,616.80 | - | 6,090,574.03 |
| அலுவலக சாதனங்கள் | 2,196,257.00 | 316,154.83 | - | 2,512,411.83 |
| மோட்டார் வாகனங்கள் | 8,749,422.60 | 708,191.67 | 511,269.00 | 8,946,345.27 |
| புகைப்படக்கருவியும், படல சாதனமும் | 8,071,966.20 | 1,108,046.60 | - | 9,180,012.80 |
| | **25,585,871.86** | **3,349,725.04** | **529,574.66** | **28,406,022.24** |
| | **12,608,937.31** | | | **11,170,153.95** |

# நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**2017 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான**

| | 01.01.2017 அன்று மீதி Rs. Cts. | ஆண்டுக்கான கட்டணம்/ மாற்றல் Rs. Cts. | (வெளி யேற்றியவை)/ (பிழை திருத்தம்) மாற்றல் Rs. Cts. | 31.12.2017 அன்று மீதி Rs. Cts. |
|---|---|---|---|---|
| **குறிப்பு - 18-அ தொட்டுணர முடியாத சொத்துக்கள்** | | | | |
| கணக்கியல் மென்பொருள் | 2,621,500.00 | 112,500.00 | - | 2,734,000.00 |
| வலைப்பின்னல் அமைப்பு | 3,419,650.72 | - | - | 3,419,650.72 |
| | **6,041,150.72** | **112,500.00** | **-** | **6,153,650.72** |
| **நிலை மாறுதல்** | | | | |
| கணக்கியல் மென்பொருள் | 1,102,093.75 | 309,998.00 | - | 1,412,091.75 |
| வலைப்பின்னல் அமைப்பு | 939,226.14 | 341,955.07 | - | 1,281,181.21 |
| | **2,041,319.89** | **651,953.07** | **-** | **2,693,272.96** |
| | **3,999,830.83** | | | **3,460,377.76** |

# நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

2017 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான

| | பதிவு | 2017 ரூ. | 2016 ரூ. | 2015 ரூ. |
|---|---|---|---|---|
| **குறிப்பு - 19 - முதலீடுகள்** | | | | |
| இலங்கை வங்கி - 8162593 | | 500,000.00 | 500,000.00 | 500,000.00 |
| தொகுதிக்கடன்முறி- இலங்கை சேமிப்பு வங்கி | | 398,200.00 | 398,200.00 | 398,200.00 |
| | | **898,200.00** | **898,200.00** | **898,200.00** |
| **குறிப்பு - 20 - வியாபாரமும் கிடைக்கவேண்டியவையும்** | | | | |
| வியாபார கடன்படுனர் | **20.1** | 365,368,348.55 | 190,632,488.52 | 211,319,015.75 |
| விழா முற்பணங்கள் | | 40,000.00 | 271,500.00 | 203,000.00 |
| பணியாளர் கடன் | | 2,995,587.95 | 2,555,730.00 | 1,506,668.50 |
| சம்பள முற்பங்கள் | | 21,000.00 | 21,000.00 | 21,000.00 |
| கிடைக்கவேண்டிய காப்புறுதி கட்டுப்பபணம் | | 171,625.16 | 224,731.81 | 103,866.72 |
| பணியாளர் கிடைக்கவேண்டியவை - ஏனையவை | | 496,388.20 | - | - |
| வங்கி உத்தரவாதம் | | 1,179,738.08 | 693,237.91 | 979,868.68 |
| தடுத்துவைத்த வரி | | 2,212.74 | - | 5,917,583.31 |
| ஈஎஸ்சீ | | 3,599,744.00 | 3,599,744.00 | 3,599,744.00 |
| உப்பாலி புதினப்பத்திரிகைகள் | | 10,695.00 | 10,695.00 | 10,695.00 |
| அபராதமும் கிடைக்கவேண்டிய மேலதிக கட்டணமும் | | 199,067.50 | 148,333.72 | (10,036.10) |
| தொங்கல் கணக்கு | | 76.63 | - | - |
| ஏஎன்சிஎல் | | 2,538,028.86 | 2,538,028.86 | 2,538,028.86 |
| விஜயா புதினப்பத்திரிகைகள் | | 188,650.74 | 188,650.74 | 188,650.74 |
| ஈஏபீ | | 3,004.00 | 3,004.00 | 3,004.00 |
| கிடைக்கவேண்டிய தரகு இ.ஓ.கூ.தா | | 63,558.00 | 63,558.00 | 63,558.00 |
| மீளளிக்கக்கூடிய வைப்புகள் | | 1,327,000.00 | 1,312,000.00 | 110,000.00 |
| சிலிங்கோ காப்புறுதி | | 41,800.00 | 41,800.00 | 41,800.00 |
| கிடைக்கவேண்டிய வங்கி வட்டி வருமானம் | | 59,730.00 | 39,819.68 | 25,300.00 |
| ஊழியர்களினால் பண மோசடி | **20.2** | 11,988,000.00 | 11,988,000.00 | 11,988,000.00 |
| நானாவிதமாக கிடைக்கவேண்டியவை | | 1,647.10 | 140,251.50 | - |
| ஈ-மன்சல கட்டுப்பாட்டுக் கணக்கு | | 355,417.35 | 17,502.00 | - |
| | | **390,651,319.86** | **214,490,075.74** | **238,609,747.46** |
| **குறிப்பு 20.1 - வியாபார கடன்படுனர்** | | | | |
| வியாபார கடன்படுனர் | | 377,742,663.24 | 200,012,425.52 | 221,300,161.52 |
| கழிக்க - அறவிடமுடியாத கடனுக்கு ஏற்பாடு | | 12,374,314.69 | 9,379,937.00 | 9,981,145.77 |
| | | **365,368,348.55** | **190,632,488.52** | **211,319,015.75** |

**குறிப்பு 20.2 - ஊழியர்களின் பண மோசடி**

இது கம்பனி ஊழியர் சிலரினால் எவ்வித அதிகாரமுமின்றி எடுக்கப்பட்ட நிதியைக் குறிக்கிறது. மேற்குறிப்பிட்ட நிதியை அறவிடுவதற்கு உரிய அதிகாரிகளினால் பொலிஸ் புலன் விசாரணை செய்யப்பட்டது.

# நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**2017 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான**

| | 2017<br>ரூ. | 2016<br>ரூ. | 2015<br>ரூ. |
|---|---|---|---|
| **குறிப்பு 21 - முன் கொடுப்பனவுகளும் ஏனைய கிடைக்கவேண்டியவையும்** | | | |
| வாகன முன்கொடுப்பனவுகள் | - | - | - |
| முன் கொடுப்பனவுகள் | 1,662,656.66 | 1,944,593.80 | 752,235.75 |
| | **1,662,656.66** | **1,944,593.80** | **752,235.75** |
| **குறிப்பு 22 - காசும், காசுக்கு சமமானவையும்** | | | |
| இவ - கணக்கு இல. 2323299 | 29,724,501.94 | 3,251,155.41 | 1,063,567.06 |
| இவ சேமிப்பு கணக்கு இல. 2329765 | 291,145.04 | 1,662,698.51 | 5,798,251.57 |
| மக்கள் வங்கி 200100130005980 | 791,574.32 | - | - |
| தயாரிப்பு முறடபணம் | 424,234.50 | 2,090,853.00 | 1,595,626.00 |
| ஏனைய முற்பணம் | 185,000.00 | 1,554,710.00 | 228,500.00 |
| | **31,416,455.80** | **8,559,416.92** | **8,685,944.63** |
| **குறிப்பு 23 - செலுத்தவேண்டிய பணிக்கொடை** | | | |
| மீதி மு/கொ | 8,639,956.56 | 6,930,220.29 | 5,490,466.65 |
| ஆண்டுக்கான பணிக்கொடை செலவுகள் | 1,052,525.30 | 2,534,524.27 | 1,566,953.64 |
| | 9,692,481.86 | 9,464,744.56 | 7,057,420.29 |
| பணிக்கொடை கொடுப்பனவுகள் | - | 824,788.00 | 127,200.00 |
| **செலுத்தவேண்டிய பணிக்கொடைகள்** | **9,692,481.86** | **8,639,956.56** | **6,930,220.29** |

# நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

2017 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான

குறிப்பு - 24 - வட்டியுடனான கடனும், கடன்படலும்

| | 2016<br>1 வருடத்திற்குள் மீளளிக்கக் கூடியவை | 2016<br>1 வருடத்திற்குப் பின்னர் மீளளிக்கக் கூடியவை | 2016<br>மொத்தம் |
|---|---|---|---|
| நிதி குத்தகைகள் | - | - | - |
| | - | - | - |

குறிப்பு - 24.1- நிதி குத்தகைகள்

| | 01.01.2017 இல் உள்ளவாறு | பெற்றுக் கொண்ட புதிய குத்தகை | மீளளித்தவை | 31.12.2017 இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|
| இலங்கை வங்கி | | | | |
| மிற்சுபிசி வான் | - | - | - | - |
| | - | - | - | - |
| | - | - | - | - |

குறிப்பு - 24.2 - எதிர்காலங்களுக்கு பகிர்வு செய்யப்பட்ட நிதி கட்டணங்கள்

| | 01.01.2016 இல் உள்ளவாறு | பெற்றுக் கொண்ட புதிய குத்தகை | மீளளித்தவை | 31.12.2017 இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|
| இலங்கை வங்கி | | | | |
| மிற்சுபிசி வான் | - | - | - | - |
| | - | - | - | - |
| | - | - | - | - |

# நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**2017 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான**

| | 2017 ரூ. | 2016 ரூ. | 2015 ரூ. |
|---|---|---|---|
| **குறிப்பு - 25 - வியாபாரமும் செலுத்தவேண்டிய ஏனையவையும்** | | | |
| வியாபார கடன்கொடுத்தவர்கள் | 239,504,342.38 | 113,449,211.21 | 108,960,599.32 |
| ஊழியர் சேமலாப நிதி | - | - | 35,151.05 |
| தொலைப்பேசிக் கட்டணம் | 47,302.86 | 47,302.86 | 83,920.15 |
| ஊழியர் நம்பிக்கை நிதி | - | - | 3,383.33 |
| விற்பனை தரகு செலுத்தவேண்டியவை | 716,321.22 | 110,000.00 | - |
| மேலதிக நேர கொடுப்பனவு மற்றும் போக்குவரத்துச் செலவு | - | - | 199,204.00 |
| முத்திரை வரி செலுத்தவேண்டியவை | 1,375.00 | - | - |
| சனச | - | - | 43,120.00 |
| பேயி வரி செலுத்தவேண்டியவை | 4,830.12 | - | - |
| நீர் | - | - | 11,373.62 |
| வற் | 54,853,633.70 | 19,311,617.86 | 19,507,924.21 |
| மின்சாரம் | - | - | 114,371.70 |
| என்பிரீ | 18,466,322.67 | 14,703,471.72 | 13,376,476.63 |
| கட்டட வாடகை செலுத்தவேண்டியவை | 900,000.00 | 900,000.00 | - |
| ஈஎஸ்சீ | - | - | - |
| ஏனைய கடன்கொடுத்தவர்கள் | 1,885,523.10 | 4,061,815.30 | 293,212.65 |
| கணக்காய்வு கட்டணங்கள் | 174,000.00 | 172,500.00 | 70,000.00 |
| எரிபொருள் | 41,651.47 | 41,651.47 | - |
| துல்லியமான சம்களக்கூறு | - | - | 143,960.83 |
| சம்பள கட்டுப்பாடு | 11,458.16 | - | - |
| சேர்ந்த செலவுகள் | 46,305,017.78 | 26,251,713.08 | 21,867,195.68 |
| குத்தகைக் கட்டணம் | - | - | 24,001.73 |
| | **362,911,778.46** | **179,049,283.50** | **164,775,546.82** |

# நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

2017 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான

**குறிப்பு - 26 சம்பந்தப்படாதவர்கள் பற்றிய வெளிப்படுத்தல் (LKAS 24)**

| பெயர் | பதவி | சம்பந்தப்பட்டவர்களுடனான கொடுக்கல் வாங்கலின் தன்மை | முகவரி |
|---|---|---|---|
| உமா ராஜமந்திரி | தலைவி | இல்லை | இல.22/02 றோஸ்மட் இடம், கொழும்பு 07. |
| மஞ்சுள ஹேரத் | பொது முகாமையாளர் | இல்லை | இல.52. கொம்பாய ஹேன வீதி, ஹோமகம. |

செலசினெ தொலைக்காட்சி நிறுவனத்திற்கும், சம்பந்தப்பட்ட நபர்களுக்குமிடையே 2017 நிதி ஆண்டுக்காக மேற்குறிப்பிட்ட எந்த ஒரு நபருடனோ அவர்களின் குடும்ப உறுப்பினர் எவருடனோ எவ்வித கொடுக்கல் வாங்கல்களும் இடம்பெறவில்லை.

**குறிப்பு 27 - கட்டட திருத்த செலவுகள்**

குத்தகை ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளவாறு கம்பனியின் 5 வருட குத்தகைக் காலப் பகுதியில் மூல தனமாக்கும் தன்மையுடைய கட்டடத் திருத்தச் செலவுகளானது பதிவழிக்கம் செய்யப்படும்.

**குறிப்பு - 28 முன்னைய ஆண்டு சீராக்கல்கள்**

| | |
|---|---|
| தேய்மானம் திருத்தம் | 511,269.00 |
| கடன்பட்டோர் மீதி திருத்தம் | (185,825.00) |
| சேர்ந்த செலவுகள் திருத்தம் | 11,514,413.74 |
| பேரேட்டுக் கணக்குத் திருத்தம் | 131,811.07 |
| அபராதம் மற்றும் மேலதிகக் கட்டணம் திருத்தம் | (812,458.68) |
| முற்பணம் திருத்தம் | (334,630.00) |
| கடன் கொடுத்தவர்கள் திருத்தம் | 291,010.25 |
| | **11,115,590.38** |

# 2017 ஆம் வருடத்தின் நிதி தொழிற்பாடுகள் தொடர்பான கணக்காய்வாளரின்

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. } சீஏஎஸ்/டீ/எஸ்ரீஜ/05/17/173    ඔබේ අංකය / உமது இல. / Your No. }    දිනය / திகதி / Date } 2018 நவம்பர் 29

தலைவர்
செலசினே தொலைக்காட்சி நிறுவனம்.

**செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச

1

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව   இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.   No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34   +94 11 2 88 72 23   ag@auditorgeneral.gov.lk   www.auditorgeneral.gov.lk

நியமங்களுக்க ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 நிறுவனத்தை நிறுவுதல்

இந்நிறுவனம் 2001 திசெம்பர் 20 திகதி மஹாவலி அதிகாரசபையிடமிருந்து வெகுசன தொடர்பு அமைச்சிற்கு கையேற்கப்பட்டிருந்த போதிலும், அதன் குறிக்கோளும் கருமங்களும் உறுதிப்படுத்தி அதிகாரத்தினை செயற்படுத்துவதற்காக அதிகாரச்சட்டத்தின் மூலம் அல்லது வேறு ஏதும் சட்டத்தின் மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த நிறுவனம் "செலசினே லிமிட்" என கம்பனிச் சட்டத்தின் கீழ் பொதுக் கம்பனி ஒன்றாக பதிவு செய்வதற்காக 2009 ஆண்டு முதல்

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

செயற்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை அந்நடவடிக்கைகள் முடிவடைந்திருக்கவில்லை.

**1.5 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக் கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக் கூற்றுக்களானவை செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 1**

நியமத்தின் 48 ஆம் பந்தியின் பிரகாரம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் மூலம் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அனுமதி அளிக்கப்பட்டிருக்கும் போது தவிர வருமானம் மற்றும் செலவினங்கள் மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கு ஈடுசெய்யப்படக்கூடாத போதிலும் நிறுவனத்தினால் செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி ரூபா 186,181,686 தொகை கிடைக்க வேண்டிய ரூபா 112,861,729 தொகைக்கு ஈடுசெய்யப்பட்டு செலுத்த வேண்டிய மீதியாக ரூபா 73,319,957 மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

4

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

நியமத்தின் 65 ஆம் பந்திக்கமைய நடைமுறையல்லாத சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மதிப்பீடு செய்யாத காரணத்தினால் ரூபா 13,041,759 கிரயத்திலான 05 வகையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் மேலும் பயன்படுத்தக்கூடியதாக இருந்தது. அதன் பிரகாரம் ஏற்பட்ட மதிப்பீட்டு வழு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டு கொள்கைகள்**

தளபாட உபகரணங்கள் மற்றும் கணனி உபகரணங்கள் என்பவற்றை பெறுமானத்தேய்வு செய்யும் போது முறையே 10 சதவீதம் மற்றும் 20 சதவீதத்தின் கீழ் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் முறையே 2 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்கும் 3 ஆண்டுகளுக்கும் 5 ஆண்டுகளுக்கும் இடையிலான வீச்சொன்றில் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்ததாக கணக்கீட்டுக் கொள்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்தது.

**2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தின் முன்னால் பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தருக்காக 2016 ஏப்ரல் 27 முதல் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குரிய ஓய்வூதியத் திணைக்களத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 71,502 தொகை முன்னைய ஆண்டின் இலாபத்திற்கு சீராக்குவதற்கு பதிலாக ஆண்டின் செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சிடமிருந்து 2014 ஆம் ஆண்டின் போது நன்கொடையாக கிடைத்திருந்த 2011 ஆம் ஆண்டில் நிறுவனத்திற்கு கையேற்கப்பட்டு தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் கெப் வண்டியொன்று 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான 13 ஆண்டு காலம் முதல் பயன்படுத்தியிருந்த போதிலும், அச்சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2009 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 115,300 இற்கும் ரூபா 115,500 இற்கும் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கெமரா மற்றும் வீடியோ உபகரணங்களுக்காக வருடாந்த பெறுமானத்தேய்வு முறையே ரூபா 11,530 மற்றும் 11,550 ஆக இருந்த போதிலும், வருடமொன்றுக்கு முறையே ரூபா 2,306 மற்றும் 6,930 வீதம் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய பெறுமதி முறையே ரூபா 83,016 ஆலும் ரூபா 32,340 ஆல் கூடுதலாகவும் ஆண்டின் பெறுமானத்தேய்வு ரூபா 9,224 ஆலும் ரூபா 4,624 ஆலும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பெறுமதிசேர் வரிக்காக கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள் தீர்வு செய்யப்படாமல் முன்னைய ஆண்டுகளில் இருந்து முன்கொண்டு வரப்பட்டிருந்த போதிலும், அதற்கான காலப்பகுப்பாய்வு தரப்பட்டிருக்கவில்லை. இக்காரணங்களினால் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த மற்றும் பெற்றுக்கொண்ட சரியான வரி அளவுகள் உறுதிப்படுத்தப்படவில்லை. அவ்வாறே முன்னைய ஆண்டுகளிலிருந்து செலுத்த வேண்டிய வரி மீதிகள் அவதானிக்கப்பட்ட போதிலும் ஆண்டின் வரி கொடுப்பனவு எதுவும் அவதானிக்கப்படவில்லை. 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வரிக் கணக்கின் மீதி ரூபா 54,853,633 ஆக இருந்தது.

## 2.3 பெறவேண்டிய செலுத்த வேண்டிய கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வியாபார கடன்பட்டோர் ரூபா 377,742,663 ஆக இருந்ததுடன் அதில் உள்ளடக்கப்பட்ட 03 ஆண்டுகளை மிகைத்த கடன்பட்டோர் மீதி மொத்த கடன்பட்டோர் மீதியில் 25 சதவீதம் அதாவது ரூபா 95,729,558 ஆக இருந்தது, 03 ஆண்டுகளை விஞ்சிய இக்கடன்பட்டோர் மீதியில் 42 பேருக்குரிய ரூபா 89 மில்லியனுக்காக மீளாய்வாண்டில் எவ்வித அறவீடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

(ஆ) சேவையிலிருந்து விலகிய உத்தியோகத்தரொருவருக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 21,000 ஆன சம்பள முற்பணம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

---

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 103(1) (இ) மற்றும் 104(1)(அ) | மீளாய்வாண்டின் போது இடம்பெற்ற 2 வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 110 | சேதங்கள் தொடர்பான முறையான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 மற்றும் 2018 சனவரி 24 ஆந் திகதிய 05/2018(1) ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கை | சகல அரச நிறுவனங்களிலும் பிரஜைகள் சாசனத்தை தயாரிப்பது இடம்பெற வேண்டிய போதிலும் நிறுவனத்தால் பிரஜைகள் சாசனம் தயாரிக்கப்பட்டு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

7

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவனத்தின் நிதி விளைவுகள் ரூபா 1,210,436 ஆன தேறிய இலாபமொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் தேறிய நட்டம் ரூபா 25,628,992 ஆகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 26,839,428 ஆன அதிகரிப்பொன்று தென்பட்டது. நேர செலவுகள் ரூபா 199,212,092 இனால் அதிகரித்திருந்த போதிலும் வருமானம் ரூபா 239,658,881 ஆல் அதிகரித்தமை மேற்படி அதிகரிப்பிற்காக பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்யும் போது 2013 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் நிதி மிகையொன்றும் 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் நிதி பற்றாக்குறையொன்றும் ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் வேதனம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மீண்டும் சீராக்கப்பட்ட போது 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 36,182,489 ஆன பங்களிப்புத் தொகை தளம்பலுடன் 2017 ஆம் ஆண்டின் போது 55,447,,319 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

(அ) நிறுவனத்தினால் 2002 பெப்ரவரி மாதத்திலிருந்து 2009 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்குரிய 28 மாதங்களின் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு கொடுப்பனவு செய்யப்படாமையால் ரூபா 812,459 ஆன தண்டப்பணத் தொகையொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2011 சனவரி 14 ஆந் திகதிய 19643/AC ஆம் இலக்க மத்திய கொழும்பு மாவட்ட தொழில் அலுவலகத்தின் உதவி ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம் மேற்குறித்த ரூபா 81.245 வீதம் 110 தவணைகளில் கொடுத்து தீர்ப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் 2017 ஆகஸ்ட் மாத்திலிருந்து 2017 திசெம்பர் வரை ரூபா 406.229 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. நிறுவனத்தின் பணத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த இத்தண்டப்பணத் தொகை சேமலாப நிதியாக கொடுப்பனவிற்கான தாமதங்களுக்கு பொறுப்பு வாய்ந்த

உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பலவீனமான நிதி முகாமைத்துவம், உள்ளகக் கட்டுப்பாட்டின் பலவீனங்கள் மற்றும் உள்ளகக் கணக்காய்வு படிப்படியாக செயற்படுத்தப்படாமை காரணமாக நிறுவனத்தின் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தராக ஆட்சேர்க்கப்பட்டிருந்த உத்தியோகத்தரினால் ரூபா 11,988,000 2014 ஆம் ஆண்டின் பொது நிதி மோசடியொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் குறித்த பரிசோதனைகள் துரிதமாக பூர்த்தி செய்யப்படாததன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் எவ்வித தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**4.2 பதவியணியினர் நிருவாகம்**

---

நிறுவனத்தினால் 2015 ஏப்ரல் 09 ஆந் திகதி முதல் அங்கீகரிக்கப்படாத தனியார் பௌதீக சட்ட மதியுரையாளர் பதவியொன்றுக்காக உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை படிகள் மற்றும் கட்டணங்களாக அங்கீகாரமின்றி ரூபா 849,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**05. நிலைபேறான அபிவிருத்தி**

---

**நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளல்**

---

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 “நிகழ்ச்சிநிரலின்” பிரகாரம், ஒவ்வொரு அரச நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். அத்துடன் மீளாய்வாண்டிற்குரிய நிறுவனத்தினால் தமது விடயப் பரப்பின் கீழ் எடுக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு செயற்படுத்துவது தொடர்பாக அறிந்திருக்காததன் காரணமாக தமது விடயப் பரப்பிற்கு உட்படும் செயற்பாடுகள் தொடர்பாக அறிந்திருக்காமை காரணமாக அச்செயற்பாடுகள் தொடர்பான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்ள வேண்டிய மைல்கல்லையும் இலக்குகளை அளவிடுவதற்காக சுட்டிகளும் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

9

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2003 ஜுன் 02 திகதிய பீஈடீ/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பிரிவின் பிரகாரம், கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், செலசினே நிறுவனத்தினால் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை 140 நாட்கள் கால தாமதத்தின் பின்னர் 2018 யூலை 18 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது நிறுவனத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) உள்ளகக் கணக்காய்வு | தகைமையுடைய பதவியணியினரை இணைத்து உள்ளகக் கட்டுப்பாட்டின் பலவீனங்கள் மற்றும் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்களை இனங்காணக் கூடிய விதமாக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு பலமாக இல்லாமை. |
| (ஆ) கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு | சரியான தகவல்களை உரிய தினத்தில் தேவையான விதமாக பெற்றுக்கொள்ளக் கூடிய விதமாக அறிக்கைகள் வைத்திருக்காமை மற்றும் கடன் மீதியில் உரிய திகதிகளில் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |

10

NAOSL
ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

| | |
|---|---|
| (இ) முற்பணக் கொடுப்பனவு | முற்பணக் கொடுப்பனவிற்காக உரித்தாக்க கூடிய கொள்ளக்கூடிய நிதிப்பிரமாணம் ஏற்பாடுகள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகள் பின்பற்றா |

11

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

சீஏஎஸ்/டீ/எஸ்ரீஜ/05/17/173

தலைவர்
**செலசினே தொலைக்காட்சி நிறுவனம்.**

**செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான அறிக்கை.**

---

செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் 2 நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கை பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்ப கூற்றுக்கள்இலங்கை சனநாயக சோசலிசக் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இண செய்யப்பட்டன. செலசினே தொலைக்காட்சி பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவ**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை இணங்க தயாரித்து நியாயமாகச் சமர் காரணமாக ஏற்படக் கூடிய பொருண் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பத நிர்ணயிக்கின்ற அத்தகைய உ முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அ நியமங்களுக்க ஒத்ததாக (ISSA நியமங்களுக்கு இணங்க எனது

மை

12

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

| | |
|---|---|
| (ஈ) சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் பொருளிருப்பு பதிவேடு பேணப்படாமை, சரியாக பொருள் மெய்மையாய்வு நடவடிக்கை செய்யப்படாமை, மற்றும் அறிக்கைகள் வழங்காமை. |

எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# 2017 ஆம் ஆண்டு கணக்காய்வாளர் பொது அறிக்கையின் பதில்கள்

**செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் 2017 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான நிதியறிக்கை தொடர்பான கணக்காய்வாளரின் அறிக்கைக்கான தெளிவு படுத்தல்**

### 1.4) நிறுவனத்தை அமைத்தல்

இந்நிறுவனத்தை அமைப்பதற்காக சட்டரீதியான ஏற்பாடுகளை உருவாக்குவதற்குரிய நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க மட்டத்தில் பூர்த்தி செய்யப்பட்டது. அதேசமயம், ஊடக மற்றும் நிதி அமைச்சின்கீழ் இது இணைக்கப்பட்டமையால், அரசுக்குரிய வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியாக மாற்றம் பெறுவதற்கு 2014 ஆம் ஆண்டில் ஓர் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு, அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்று, நிதி அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டது. இது தொடர்பாக திறைசேரியுடன் கலந்துரையாடிக் கொண்டிருப்பதோடு, வெகு விரைவில் இந்நிலைமைக்கு ஓர் பரிகாரம் எதிர்பார்க்கப்படுகிறது.

### 2.2) நிதிக்கூற்ற பற்றிய கருத்துக்களை வெளியிடுதல்

#### 2.2.1) இலங்கை அரசதுறையின் கணக்காய்வுத் தரநியமங்கள்

(அ) இலங்கை அரசதுறையின் கணக்காய்வு தரநியமம் 01.

கூட்டப்பட்ட பெறுமானம்மீது வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரி, வரவு மற்றும் செலவு என்பவற்றை 2018 ஆம் ஆண்டில் தனியாகக் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) இலங்கை அரசதுறையின் கணக்காய்வு தரநியமம் 07.

பூஜ்ஜியமான பெறுமானங்கள் கொண்ட சொத்துக்கள் தற்போது பயன்படுத்தப்படுவதோடு, 2017 வருடத்தில் இறுதிக் கணக்கு குறிப்புகள் இல.11.2 இற்குமைய சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்காக மதிப்பாய்வு திணைக்களத்தின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு, 2018 ஆம் ஆண்டில் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும்போது ஏற்புடைய பெறுமானங்களை கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

#### 2.2.2 கணக்காய்வுக் கொள்கைகள்

சொத்துப் பெறுமானத் தேய்வு கணக்குக் கொள்கை 2013 ஆம் வருடத்தில் மாற்றப்பட்டதோடு, கணக்குகள் மேற்படி ஆண்டில் இருந்து 10 ஆண்டுகளுக்கு சரளமான வழிவகைகள் மூலம் சொத்துப் பெறுமானத் தேய்வு அமுலாக்கப்பட்டது. இத்தவறு 2018 வருடத்தில் நிதிக்கூற்று சமர்ப்பிக்கப்பட்டபோது திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

#### 2.2.3 கணக்குப் பதிவின் குறைபாடுகள்

(அ) பிடித்து வைத்திருக்கும் இலாபத்தோடு சீராக்கம் செய்து 2018 வருடத்தில் அது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) இந்தக் கப (உயடி) வகையைச் சேர்ந்த மோட்டார் வாகனம் 2012 வருடத்தில் 1,950,000 ரூபாய்க்கு மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குப் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டது.

(இ) 2013 வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட, தேய்மான விகிதாசாரம் மாற்றப்பட்டபோது 2012.12.31 வரை மேற்கொள்ளப்பட்ட தேய்மானச் சொத்து மொத்த ஆகுசெலவில் இருந்து குறைக்கப்பட்டு தேறிய தற்போதைய பெறுமதி சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்படுமெனக் கருத்தில்கொண்டு தேய்மானம் செய்யப்பட்டது.

#### 2.2.4 கணக்காய்விற்கான சான்றாதாரங்கள் இல்லாமை

2016 வருடத்திற்கு ஏற்புடைய கோப்பு அரச கணக்காய்வுத்துறைக்கு வழங்கப்பட்டதோடு, "செலசினெ" நிறுவனத்திற்கு அது மீளக் கிடைக்கவில்லை. முன்னைய ஆண்டுகளில் வரிச் செலுத்துகையின்போது அனைத்து விபரங்களும் அதில் உள்ளடக்கப்பட்டன.

### 2.3 வரவு மற்றும் செலவுக் கணக்கு

(அ) இந்தக் கடனாளிகளின் நிலுவையை ஈடுசெய்யுமாறு மேற்படி சேவை நாடுநர்களுக்கு தினந்தோறும் அறிவிக்கப்பட்டது. கடந்த நிர்வாக அதிகார சபையினால் இக்கடனாளிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்கு ஏற்புடைய உரிய அங்கீகாரம் வழங்காமையால் நிறுவனப் பிரதானிகள் மாற்றம் அடைந்தமையால், அதுபற்றி அறிந்த தரப்பினர் இல்லாமை போன்ற காரணங்களால், நிதி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கும்போது பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. வெளிவாரி வழங்குநர்களினால் நடவடிக்கை எடுத்தபோது அது சரியாக செயற்படுத்தப்படாமையினால் சேவை நாடுநர்களின் கொடுப்பனவுகள் வழங்காமல் இருப்பதற்கு காரணமாக அமைந்தன. இக்கடன்களை மீளப் பெறுவதற்கு தொடர்ந்தும் முயற்சி செய்யப்படும் அதேவேளை, கடன் நிலுவையைத் தீர்க்குமாறு இடையிடையே அறிவிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாகக் குறிப்பிட்ட நிறுவனப் பிரதானிகளின் கவனத்திற்கும் இந்தக் கடன்பட்டோரின் நிலுவை அறிவிக்கப்பட்டது..

(ஆ) சேவையில் இருந்து நீங்கிய பெண் உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்ட 21,000 ரூபாய் சம்பள முற்பணம் 2018 ஆண்டில் தீர்க்கப்பட்டது.

## 2.4 சட்டதிட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு உட்படாமை

(அ) இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்

(1) மீளாய்வுக்குரிய ஆண்டில், இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 189,250 ரூபாய் விபத்துக்கு ஏற்புடைய நிதி ஒழுங்கு விதிகளுக்கமைய விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த இழப்பீடுகள் தொடர்பாக இழப்பீடுகள் மற்றும் நட்டம் தொடர்பான பதிவேட்டில் பதியப்பட்டதோடு, காப்புறுதி நிறுவனத்தினால், இடம்பெற்ற இழப்பீட்டைச் சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. வாகனங்களைத் திருத்துவது தொடர்பாக அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் ஆலோசனைக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும். உள்ளார்ந்த நட்டங்கள் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட கராஜ்களில் இருந்து திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படும் எனக் குறிப்பிடுகின்றேன்.

(11) இழப்பீடுகள் தொடர்பான ஓர் பதிவேட்டைப் பராமரிப்பதோடு, அது உங்களின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட முடியும்.

(ஆ) இலக்கம் 05/2018 மற்றும் 05/2018(1) இலக்கம் கொண்ட அரசாங்க நிருவாக மற்றும் உள்நாட்டு அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரஜைகள் / பயனாளிகள் நியதிச்சட்டம் இந்த நிறுவனத்தில் செயற்படுத்தப்பட்டதா என்பதுபற்றி எதுவித தகவலோ அல்லது கடிதக் கோப்போ கண்டுபிடிக்கப் முடியவில்லை.

எனவே, இலக்கம் 05/2008 இன் அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 2.4 அத்தியாயத்தின் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தினால் இச்சமவாயத்தைத் தயாரித்தல் மற்றும் செயற்படுத்துதல் தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு அவசியமான பயிற்சியையும் அறிவூட்டலுக்கும் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தை விசாரித்து தகுதியான உத்தியோகத்தர்களை அனுப்பி பயிற்சியை வழங்குவதும் பின்னர் பிரஜைகளின் சமவாயத்தைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஏற்புடைய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டதென்பதையும் தயவுடன் அறிவிக்கிறேன்.

## 3) நிதிபற்றிய மீளாய்வு

### 3.1) நிதிப் பெறுபேறுகள்

நிறுவனத்தின் பெறுமானம் சேர்க்கப்பட்ட 2016 வருடத்தோடு ஒப்புநோக்குகையில் 240 மில்லியன் ரூபாயால் அதிகரித்தமையால் அதன் பெறுபேறாக தேறிய இலாபம் 41.0 மில்லியன் ரூபாயால் அதிகரிக்க முடிந்துள்ளது. நிதி மற்றும் ஏனைய செலவினங்கள் சிக்கனமாக நிருவகித்தமையால் மேற்படி செலவினம் 2016 ஐ விட, 4.4 மில்லியன் ரூபாயால் குறைந்தது. இதன் பெறுபேறாக2017 இல், 1.2 மில்லியன் ரூபாய் தேறிய இலாபமாக கையகப்படுத்துவதற்கு முடிந்துள்ளது.

## 4) நெறிப்படுத்தல்பற்றிய மீளாய்வு

### 4.1) முகாமைத்துவ செயற்பாடுகள்

(அ) சேமலாப நிதி தொடர்பாக 2002 - 2009 வரையிலான காலத்திற்கு ஏற்புடைய 812,459 ரூபாய் மிகைவிதிப்பாக (surcharge) ஊழியர் சேமலாப நிதியினால் மிகைவிதிப்பாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது. இக்காலகட்டத்தில் நிறுவனத்திற்கு பல்வகையான நிதிப் பிரச்சினைகளையும், கட்டங்களையும் எதிர்நோக்க வேண்டியமை காரணமாக உரிய நேரத்தில் மேற்படி நிதி, ஊழியர் சேமலாபநிதியில் வைப்பிலிட முடியவில்லை. இது ஓர் அதிகாரியினால் ஏற்பட்ட தவறாகக் கருத முடியாது.. அதேசமயம், மாதாந்த தவணைக் கட்டணமாக தொழில் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்று அனைத்து நிலுவைப் பணமும் தொழில் ஆணையாளரிடம் வைப்பிலிடுவதற்கு முன்னைய நிருவாக அதிகாரசபை நடவடிக்கை எடுத்தது.

(ஆ) நிறுவனத்தின் உள்ளக நிருவாகத்தின் பலவீனம் காரணமாக உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படும் நிதி மோசடிகள்பற்றி அப்போது பதவி வகித்த நிருவாக அதிகாரசபை கருவாக்காடு பொலிஸ் நிலையத்தில் அதற்கு ஏற்புடைய முறைப்பாட்டை மேற்கொண்டது. இதன்போது அதனோடு ஏற்புடைய உள்ளக சாட்சிகளை விசாரணை செய்தல் இடம்பெற்றுள்ளது. இது இவ்வாறு இடம்பெறும் சந்தர்ப்பத்தில் இப்பெண் உத்தியோகத்தர் சேவையில் இருந்து விலகிச் சென்றுள்ளார். தற்போது இந்த நட்டஈடு தொடர்பாக நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதோடு, இப்பிரிவின்மூலம் புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 4.2) பணிக்குழுவினரின் நிருவாகம்

2015 வருடத்தில் புதிய அரசு பதவி ஏற்றபின்னர், நிதிமோசடிகளை கண்டறிவதற்கு விசேட நிதிமோசடிகள் விசாரணைப் பிரிவொன்று நியமிக்கப்பட்டது. ஏற்கனவே, இவ்வலுவலகத்தோடு தொடர்புடைய பல பாரிய நிதி மோசடிகள் அறிக்கையிடப்பட்டிருந்தன. இதன்போது இந்த அலகின்மூலம் தினசரி உத்தியோகத்தர்கள் வருகைதந்து வாக்குமூலங்கள் பெறுவதையும் புலனாய்வு மேற்கொள்வதையும் இவ்வலுவலகத்திற்கு உரித்தான 5 ஆண்டுகால நிதிக் கோப்புகள் மேற்படி நிறுவனத்தில் இருந்து FCID தனது பொறுப்பில் எடுத்துக்கொண்டது.

அதேசமயம் உள்ளக விசாரணைகள், தொழில் நடுத்தீர்ப்புச் சபையில் விசாரிக்கப்படும் வழக்குகள், கொழும்பு வாணிப மேல்நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் வழக்குகள், தொழில் திணைக்களத்தில் விசாரிக்கப்படும் வழக்குகளில் பாரிய எண்ணிக்கை குவிந்து தீர்க்கப்படாமல் இருந்ததோடு, அது தொடர்பான அறிவுள்ள யாராவது ஒருவர் இல்லாதபட்சத்தில், மேற்படி நடவடிக்கைகள் செயலிழந்து மந்தகதியில் இயங்கி வந்தன. இதன் காரணமாக அதிக செலவினத்தை அலுவலகம் ஏற்கவேண்டி இருந்தது.

எனவே, மிகத் துரிதமாக மேற்படி வழக்கு நடவடிக்கைகள் பற்றிய ஆலோசனைகளைப் பெறுவதற்கு தற்காலிக நடவடிக்கையாக தகுதிபெற்ற சட்டத்தரணி ஒருவரின் சேவை பெறப்பட்டுள்ளது. தற்போது இத்தகைய நடவடிக்கைகள்பற்றி சட்டத்தரணிகளின் ஒத்துழைப்பைப் பெறுவதற்குத் தயாராகும்போது அவர்களினால் அறவிடப்படும் பாரிய நிதிபற்றி கவனிக்கையில் எமது நிறுவனத்திற்கு நியமித்த சட்டத்தரணிக்கு கட்டணம் செலுத்தி மிகக்குறைந்த கட்டணத்தை மாத்திரம் செலவு செய்தோம் என்பதை இங்கு சுட்டிக்காட்ட முடியும்.

2. மேற்குறிப்பிட்ட உத்தியோகத்தர் அவசரகால தேவையின் அடிப்படையிலேயே நியமிக்கப்பட்டுள்ளார். இப்பதவி தற்காலிகமானது ஆகையால் முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும் இந்த உத்தியோகத்தருக்கு 2016 வருடத்தின் பின்னர் இத்தகைய மாதாந்தக் கொடுப்பனவை வழங்குவதும் நிறுத்தப்பட்டுள்ளது.

3. தகைமை கொண்ட அனுபவம் வாய்ந்த ஒரு சட்டத்தரணியே சட்ட ஆலோசகராகத் தெரிவுசெய்யப்பட்டு, செயற்பட்டு வருகிறார்.

4. அவர் அலுவலகத்தோடு ஏற்புடைய சகல நடவடிக்கைகளுக்கும் உதவி வழங்கக்கூடிய வகையில் நியமனம் பெற்றுள்ளார். அலுவலகத்தோடு தொடர்புடைய அனைத்து சட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் சட்ட ஆலோசனை பெறவேண்டி இருப்பதனால் அவருக்கு விநியோகிக்கப்பட்டுள்ள நியமனக் கடிதத்தில் செய்ய வேண்டிய கடமைகள் தனித்தனியாகக் குறிப்பிடப்படவில்லை. இக்காலத்தில் அவர் குறுங்கால நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதைக் காணமுடிகிறது.

5. அவருக்கு வழங்கப்பட்டுள்ள நியமனக் கடிதத்தில் வாரமொன்றிற்கு இரண்டு தடவைகள் சேவைக்கு வருகை தரவேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தாலும், இரண்டு தடவைகளுக்கு மேல் அவருடைய சேவை பெற்றுக்கொள்ளப்பட்டமையால், சேவைக்கு வருகை தரல்பற்றிய அறிக்கையை வைத்திருக்கும் அவசியம் ஏற்பட மாட்டாது.

## 5) நிலைபேறான அபிவிருத்தி

### 5.1) நிலைபேறான அபிவிருத்தியின் குறிக்கோள்களை அடைதல்

நிலைபேறான அபிவிருத்தியைக் குறிக்கோளாகக் கொண்டு நிறுவனத்தினால் அடையாளம் கண்ட குறிக்கோள்களின் சார்பில் பங்களிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதோடு அதற்கு ஏற்புடைய அடையவேண்டிய இலக்குகளை அடைவதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதனூடாக மேற்படி இலக்குகளை அடைவதற்கு உரித்தான முன்னேற்றத்தை அளவிடக்கூடிய சுட்டிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

## 6) கணக்கு நடவடிக்கைகளின் இயல்பும் நல்லாட்சியும்

### 6.1) நிதிக்கூற்றை சமர்ப்பித்தல்

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 இலக்கம் கொண்ட அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 வாசகத்திற்கு அமைய உரிய கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்க முடியவில்லை. காரணம் கடந்த ஆண்டுகளுக்கு ஏற்புடைய ஒருசில இறுதிக்கணக்குகள் பூர்த்தியாகாமையினால் அவற்றைத் துரிதமாக முடிவுறுத்த வேண்டியிருந்தது. எதிர்காலத்தில் தாமதம் ஏற்படாத வகையில் கணக்கு அறிக்கைகள் கணக்காளர் நாயகத்திடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## 7) முறைமைகளும் நிருவாகமும்

(அ) உள்ளக கணக்காய்வு

உள்ளக கணக்காய்வுப் பிரிவிற்கு அவசியமான ஆளணியினர் தற்போது வழங்கப்பட்டுள்ளனர். அதற்கமைய இப்பிரிவின் நடவடிக்கைகள் சுயாதீனமாக முன்னெடுப்பதற்கு அவசியமான உபகரணங்களும் வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) கடனாளிகள் மற்றும் கடன் உரித்தாளர்கள் பற்றிய கட்டுப்பாடு

எதிர்காலத்தில் கடனாளிகள் மற்றும் கடன் உரித்தாளர்கள் தொடர்பான தகவல்கள் மிகத்துரிதமாகப் பெறுவதற்குத் தகுதியான புதிய மென்பொருள் தொகுதியை அறிமுகப்படுத்துவதற்கு (Job Manager) நடவடிககை எடுத்துள்ளார். அதேசமயம் இதன் ஊடாக மிகச் சரியான தகவல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) முற்பணம் வழங்குதல்

முற்பணம் வழங்குகையில் நிதி ஒழுங்கு விதிகளை அனுசரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதோடு, அது தாமதமின்றி ஏற்புடைய உத்தியோகத்தர்கள் பெற்ற முற்பணத்தைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஈ) சொத்துக்களின் கட்டுப்பாடு

நிலையான சொத்துக்களுக்குரிய பதிவேடு, கணினி (Computer) உப பாகங்கள் பற்றிய பதிவேடு தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது. இது துரிதமாக உங்களுக்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இருப்புப் பதிவேடு (Inventory) நிவாகப் பிரிவினால் பராமரிக்கப்படுவதோடு, பொருட்களின் அளவீட்டு ஆய்வு (Survey) நடவடிக்கைகள் உரிய முறையில் மேற்கொண்டு தங்களிடம் அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.



கேஷால் ஜெயசிங்ஹ
தலைவர்
செலசினே தொலைக்காட்சி நிறுவனம்.

SELACINE TELEVISION INSTITUTE
No. 224, Bauddhaloka Mawatha, Colombo 7, Sri Lanka
Tel. : 011 432 0777, 011 205 8227 Fax : 011 205 8229
E mail : info@selacine.lk
www.selacine.lk